ௐ

புவனேச்வரி மஹிமையும்,
அஷ்டலக்ஷ்மிகளையும் அளிக்கும்
ஸ்ரீ ஸஹஸ்ர சண்டீ ஹோமமும்.



இயற்றியவர் :

உபன்யாஸ சக்ரவர்த்தி, அம்ருத வாக்வர்ஷீ சேங்காலிபுரம்
பிரும்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்கள்

ஸ்ரீ ஸஹஸ்ர சண்டீ யக்ஞ ஞாபகார்த்த
வெளியீடு :
2—6—1963
... ஸதாசிவ ப்ரும்மேந்திர,
... ஸ்வாமிகள் அதிஷ்டானம்,
:: புதுக்கோட்டை.

புவனேச்வரி மஹிமையும்,
அஷ்டலக்ஷ்மிகளேயும் அளிக்கும்
ஸ்ரீ ஸஹஸ்ர சண்டீ ஹோமமும்.

*

இயற்றியவர் :

உபன்யாஸ சக்ரவர்த்தி, அம்ருத வாக்வர்ஷீ சேங்காலிபுரம்
பிரும்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்கள்

*

ஸ்ரீ ஸஹஸ்ர சண்டீ யக்ஞ ஞாபகார்த்த
வெளியீடு :

2–6–1963

ஸ்ரீ ஸத்குரு ஸதாசிவ ப்ரும்மேந்திர,
ஸரஸ்வத்யவதூத ஸ்வாமிகள் அதிஷ்டானம்.
புவனேச்வரீ நகர் :: புதுக்கோட்டை.

3-3

பொருளடக்கம்.



உ

முன்னுரை

❀❀❀

புண்ய பூமியாகிய நமது பாரதநாடு பல மஹரிஷிகளை யும், மஹான்களையும் பெற்றெடுத்த பெருமையுடையது. மனிதனுகப் பிறந்து மிருக வாழ்க்கை வாழாமல் பண்புடைய செம்மையான வாழ்க்கை நடத்த நமது ஆன்றோர்கள் நமக்கு வழிகாட்டியுள்ளார்கள். உலகாயத வாழ்க்கையில் உழன்று, மனித வாழ்க்கையின் மாண்பினை மறந்து அல்லற்படும் உலகினர்க்கு நமது பாரததேசம் கலங்கரை விளக்கம் போல் திகழ்கிறது. பாரத நாட்டினரின் சமுதாய அமைப்பு, வாழ்க்கை முறை, இலட்சியம் முதலானவற்றின் அடிப்படைத் தத்துவத்தை உணர்ந்து இன்று உலகின் பல பேரறிஞர்கள் வியக்கின்றுர்கள். உலகவியலுக்கேற்ற அறிவு வளர்ச்சியையே பெரிதென மதிக்கும் இன்றைய உலகம் அதனுல் விளையும் தீங்கினை உணரவில்லை. உள்ளத்தில் அன்பினையும், அருளையும் வளர்க்காத அறிவு வளர்ச்சி நாட்டுக்கு நலம் விளைக்காது; மாருகத் தீமையையே உண்டாக்கும். இதனையே திருவள்ளுவர்,

> அறிவினுல் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
> தந்நோய்போற் போற்ருக் கடை.

எனக் குறிப்பிடுகின்றுர். அன்பின் அடிப்படையில் வளர்ச்சியடையாத அறிவினை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த ஆத்ம ஞானத்தை எல்லோரும் பெற்று உய்யவேண்டுமென்பது தான் ஹிந்து தர்மத்தின் அடிப்படை நோக்கமாகும்.

இந்த தர்மங்களை ஜனங்களுக்கு தெளிவாக ஞானிகள் பலர் எடுத்துரைத்திருக்கின்றனர். வேதங்களும்

வேதாசமங்களும், இதிஹாஸ புராணங்களும், தர்ம சாஸ்திரங்களும் இந்த நாட்டின் மண்ணைப் புனிதப் படுத்தியதுடன் இந் நாட்டுப் பாரம்பர்யத்தில் சக்தியை மிளிரச் செய்துள்ளது. அந்த மஹரிஷி பரம்பரையிலே தோன்றியவர்களே ஸ்ரீ சதாசிவப்ரம்மேந்த்ராள். அவர் களது பாதாரவிந்தங்களின் தூளிகளால் பாவனமான பகுதிகள் பல. அவர்களது கருணை கடாக்ஷத்தால் அருளப் பெற்றது புதுக்கோட்டைப் பிரதேசம். அக்கருணை இன்றும் இப் பகுதிக்கு அவதூத பரம்பரையைத் தந்து இந்த தேசத்தின் உயிர்நாடியாக இந்த ஸ்தலத்தை ஆக்கிவிட்டது. ஜட்ஜ் ஸ்வாமிகள் என அழைக்கப்படும் மஹா யோகிகள் ஸமாதியில் தேஜோமயமாய் விளங்குகின்றார் கள். அவர்களது சிஷ்யர்களான **சேந்தமங்கலம் ஸ்ரீ அவதூத ஸ்வாமிகள் அவர்களால் இங்கு அதிஷ் டானம்** நிர்மாணிக்கப்பட்டது.

எவருக்கும் கிடைக்காத மஹான்களுடைய சேர்க்கை புதுக்கோட்டை வாஸிகளுக்குக் கிடைத்திருப்பது அவர் கள் செய்த நற்றவத்தின் விளைவே என்று கூறவேண்டும். பல் ஆண்டுகளுக்கு முன் திருக்காளத்தி என்னும் திருத் தலத்தில் நெடுங்காலம் காஷ்ட மௌன விருதம் பூண்டு தவத்தை மேற்கொண்டிருந்த மஹாயோகிகளும், மஹாக் ஞானிகளுமாகிய **ஸ்ரீ ராமகிருஷ்ணேந்திர ஸரஸ்வத் யவதூத ஸ்வாமிகளின்** சிஷ்யரும், தபோதனர்களும், ஐம்புலன்களையும் அவித்து ஆன்றோர் வழி நின்று பற்றென்னும் தளைகளை அறுத்து, ஜீவன் முக்தர்களு மான **ஜட்ஜ் ஸ்வாமிகள்** என உலகோரால் போற்றப் பட்ட **ஸ்ரீ ஸதாசிவ ப்ரம்மேந்திர ஸரஸ்வத்யவதூத ஸ்வாமிகள்,** புதுக்கோட்டை கிழ 7-ம் வீதியில் ஸ்ரீ மார்த்தாண்ட பைரவத் தொண்டமான் ஆட்சியில், ஸ்ரீ வெங்கட்ராம தாஸ் திவானாக இருந்த காலத்தில் ஸித்தியடைந்து ஆங்கே கோவில் கொண்டு அருள் பாலித்து வருவது யாவரும் அறிந்ததே. ஸ்ரீ ஜட்ஜ்

ஸ்வாமிகள் பூர்வாச்ரமத்தில் தாம் மேற்கொண்டிருந்த நீதிபதி பதவியைத் துறந்து திகம்பரராக இமயம் முதல் குமரி வரை சஞ்சாரம் செய்துகொண்டு வரும்போது தன்னைச் சரணடைந்தவர்களிடம் அன்புகொண்டு உபநிஷத்துக்களின் மெய்ப் பொருளை அவர்களுக்கு உபதேசம் செய்து, அக்ஞான இருளை நீக்கி வைராக்கிய புருஷர்களுக்கு ஞானம் உண்டாகுமாறு அருள் புரிந்து வந்தார்கள்.

ஸ்ரீ ஜட்ஜ் ஸ்வாமிகளின் சீடர்களாய் துறவு என்னும் சொல்லுக்கேற்ப ஆனைத்தையும் துறந்து, அவதூத நிலையில் நாடெங்கிலும் சஞ்சரித்து சேலம் ஜில்லா, சேந்தமங்கலத்தில் ஜீவன் முக்தராக விளங்கியவரும். மஹாக்ஞானியுமான ஸ்ரீ ஸ்வயம்ப்ரகாச ப்ரம்மேந்திர ஸரஸ்வத்யவதூத ஸ்வாமிகள் அவர்களைப் பற்றி நாடு நன்கறியும். அன்னார் ஞான வைராக்கியமே உருவெடுத்த துறவரசர். அவர்கள் புதுக்கோட்டையில் உள்ள தமது ஸத்குருவின் அதிஷ்டானத்தை நிர்மாணித்து தாது-ஸு வைகாசி-மீ 18உ (31—5—36) மஹாகும்பாபிஷேகத்தை தாமே மிகச் சிறப்புடன் நடத்தினார்கள். சேந்தமங்கலம் ஸ்ரீ ஸ்வாமிகளின் பரிபூர்ண அனுக்கிரகம் பெற்றுள்ளவரும், எண்ணமெல்லாம் உலக நலமாக்கி. ஞானச் சுடராய். நம்மிடையே வழிகாட்டியாய்த் திகழும் ஸ்ரீமத் சாந்தானந்த ஸ்வாமிகள் அவர்கள் தமது பரம குருநாதரான ஜட்ஜ் ஸ்வாமிகளின் அதிஷ்டானத்தில் செய்துள்ள குரு கைங்கர்யங்களை அனைவரும் அறிவர். இவ்வதிஷ்டானத்தை புதுமை பொலியும் புண்ணியஸ்தலமாக்கி தன்னை வந்தடைந்து வழி பட்டவர்களுக்கு குன்றாத செல்வமும். சீரிய வாழ்வும் நல்கும் திவ்விய க்ஷேத்திரமாக்கி ஸ்ரீ ஜட்ஜ் ஸ்வாமி அவர்களின் சமாதியைப் புதுப்பித்தது, அழகிய முன்மண்டபத்தையும் ஏராளமான பொருட்செலவில் அமைத்து நாடனைத்தும் வியக்கும் வண்ணம் மஹா கும்பாபிஷேகத்தை துர்முகி-ஸு வைகாசி-மீ 14உ (5—5—56) நடத்தி வைத்தார்கள். பின்னர் மண்டலா

பிஷேகமும் நடத்தி அதனைத் தொடர்ந்து ஆண்டுதோறும் ஸத்குரு ஜயந்தி உத்ஸவத்தை மிக விமரிசையாகக் கொண்டாடும் பணியில் நம்மை ஈடுபடுத்தி வருகிறார்கள்.

1957-ல் ஸ்ரீ மஹாகணபதி ஹோமம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. 1958-ல் மிகப் பெரிய அளவில் ஒரே நாளில் 121 வேதவித்பன்னர்களைக்கொண்டு ஸ்ரீ மஹா ருத்ரஜபஹோமம் நடைபெற்றது. 1959-ல் இதற்கு முன் எந்நாட்டிலும் நடந்திராத முறையில் உலக நலத்தைக் கருதி லக்ஷ நவக்ரஹஹோமம் ஒரே நாளில் 108 மாண்பு மிக்க பெரியோர்களைக் கொண்டு மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றது. 1960-ல் நடந்த ஜயந்தி உத்ஸவத்தில் ஸ்ரீ மஹாகணபதி ஹோமம், ஆவஹந்தி ஹோமம், ஸ்ரீ துர்காஸூக்த ஹோமம், ஸ்ரீ ருத்திரைகாதசினி வஸோர்தாரா ஹோமம் முதலியன சிரத்தாபக்தியுடன் மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. ஆஸ்திக தர்மத்தை மேலும் வளர்த்து வருவதற்காக அதிஷ்டானத்தில் ஜயந்தி உத்ஸவ காலங்களிலும், அதனைத் தொடர்ந்து தினந்தோறும் வித்வான்களால் ப்ரவசனங்கள் நடைபெற்று வருகின்றன. நித்திய வேதபாராயணமும் நடைபெற்று வருகிறது. இத்தகைய அரிய செயல்களில் நம்மை ஈடுபடுத்தி வரும் ஸ்ரீ ஸ்வாமிகள் அவர்கள் கருணையால் இவ்வதிஷ்டானத்தின் அழகுக்கு அழகு செய்வதே போல் ஸ்ரீ புவனேச்வரியின் பஞ்சலோக விக்ரஹம் அதிஷ்டானத்தில் ஸ்தாபிக்கப்பட்டு பல லக்ஷார்ச்சனைகளும் நவராத்திரியில் விசேஷ நவாவரண பூஜையுடன் லக்ஷார்ச்சனையும் நடைபெற்றது.

சென்ற வருஷம் 6—6—62 அன்று ஸ்ரீ புவனேச்வரீ ஆலய மஹா கும்பாபிஷேகமும், அதனைத் தொடர்ந்து மண்டலாபிஷேகமும் உலகோர் ஆச்சர்யப்படும் வகையில் சிறப்பாக நடைபெற்றன.

மணித்வீபத்தில் அம்பாள் மந்தஹாஸத்துடன் விளங்கும் காட்சியை மந்திர சாஸ்த்ரங்கள் வருணிக்கின்ற முறையில் இன்று நாம் காண்கிறோம். ஸ்ரீ புவனேச்வரியின் மஹிமையையும், கருணையையும் ஸ்ரீ தேவீ பாகவதம் பிரபஞ்சஸாரம் முதலான க்ருந்தங்கள் மிக விரிவாகச் சொல்லுகின்றன.

ஆதிதைவம் ஸ்ரீ புவனேச்வரீயே என்று ஸ்ரீ ஆதி சங்கரர் கூறுகிறார் :—

अथाभिवक्ष्ये सकलप्रपञ्चमूलात्मिकायाः प्रकृतेर्यथावत् ।

மேலும் தைத்ரீயச்ருதி

"दिवो मूर्धासि, पृथिव्या नाभिः, विष्टम्भनी दिशां आधिपत्नी भूवनानां"

என்று கூறுகிறது. இதன் பொருள்: விண்ணுலகம் உன்னுடைய முடியாகத் திகழ்கின்றது. மண்ணுலகு உன்னுடைய நாபியாக விளங்குகின்றது. எனவே திசைகள் அனைத்தையும் நீயே தாங்குகிறாய். உலகங்கள் அனைத்தும் உனது ஆணை வழியாக இயங்குகின்றன. இதனால் அன்னை புவனேச்வரியே இவ்வுலகங்கள் அனைத்திற்கும் ஆதாரமாகத் திகழ்கிறாள் என்பது வேதமும் கண்ட முடிவாகும்.

இத்தகைய ஸ்ரீ புவனேச்வரியை பிரதிஷ்டை செய்து ஆராதிப்பதின் பயனை ஸ்ரீ தேவீ பாகவதம் பின்வருமாறு கூறுகிறது.

देव्याश्चायतनं भूप विस्तीर्णं कुरु भक्तितः ।
येनैव सकला सिद्धिः तव स्याज्जनमेजय ॥
पूजिता परया भक्त्या शिवा सकलदा सदा ।
कुलवृद्धिं करोत्येव राज्यं च सुस्थिरं सदा ॥

ஹே ஜனமேஜய மன்னனே! தேவீ ஸ்ரீ புவனேச்வரிக்கு விசாலமான ஆலயம் அமைப்பாயாக. அவளை நீ பக்தியுடன் வழிபட்டால் ஸகல ஸித்தியும் உண்டாகும். உறுதியான பக்தியால் ஸ்ரீ தேவியை பூஜித்தால் அவள் எல்லா இஷ்டங்களையும் எப்பொழுதும் கொடுக்கிருள். மக்களின் குடும்ப விருத்தியை இடையருமல் தர்மநெறியில் செலுத்துகிருள். தேசத்தில் ஸ்திரமான செங்கோலாட்சியை நடத்தி வைப்பாள் என ஸ்ரீ வியாச பகவான் ஜனமேஜயனுக்கு உபதேசிக்கின்ருர்.

இதுபோன்று சிவபுராணத்திலும் ஸ்ரீ புவனேச்வரியின் ஆலய நிர்மாணத்தின் சிறப்பு கூறப்படுகின்றது.

यो देवीं स्थापयेत् स्कन्धप्रासादे भक्तिभावतः ।
त्रैलोक्यं स्थापितं तेन यतः सर्वमयी शिवा ॥
नानेन सदृशो धर्मः देवीस्थापनकर्मणा ।
तुष्टायां खलु तस्यां तु संतुष्टं भुवनत्रयम् ॥
ज्ञानं दिव्यं परं प्राप्य कैवल्यं मोक्षमाप्नुयात् ॥

எவரொருவர் பக்தியுடன் அழகான ஆலயத்தில் ஸ்ரீ புவனேச்வரியை நிர்மாணம் செய்கிருரோ அவரால் மூவுலகங்களும் பிரதிஷ்டை செய்யப்பட்டதாக ஆகும். (ஏனெனில் தேவி புவனேச்வரீ மூவுலக வடிவமாக விளங்குகின்ருள்) இதற்குச் சமானமான தர்மம் வேறு இல்லை. தேவி புவனேச்வரீ சந்தோஷித்தால் மூவுலகங்களும் சந்தோஷமாக வாழலாம். இவ்விதம் செய்பவர் இதில் ஈடுபடும் பக்த குடும்பங்களுடன் தேவீலோகமான மணித்வீபத்தில் வசித்துக்கொண்டு திவ்ய ஞானம் பெற்று கைவல்யம் என்னும் மோக்ஷத்தை அடைவர் என்பது கருத்தாகும்.

மேற்கூறியவைகளிலிருந்து ஸ்ரீ புவனேச்வரியின் பிரதிஷ்டையும் ஸ்ரீ சண்டீயக்ஞ ஆராதனையும் உலக க்ஷேமார்த்தமென்பது வெள்ளிடைமலை. இத்தகைய பெரும்பணியில் ஸ்ரீ சாந்தானந்த யதீச்வரராள் அரும்பாடு பட்டு ஆலயம் நிர்மாணித்ததோடு 2—6—63 அன்று ஸ்ரீ ஸஹஸ்ரசண்டீ மஹாயக்ஞத்தையும் நடத்துகிறார்கள். இந்த யக்ஞம் நமது தமிழ் நாட்டில் இப்பொழுது தான் முதன் முதலாக நடைபெறுகிறது.

இப்பெரும் பணியில் சேங்காலிபுரம் உபன்யாச சக்ரவர்த்தி அம்ருத வாக்வர்ஷீ பிரும்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்கள் முழுமனதுடன் ஈடுபட்டிருப்பது ஜனங்களுக்கு மிகுந்த சந்தோஷத்தை அளிக்கிறது. ஸ்ரீ தீக்ஷிதர் அவர்களைப் பற்றி நான் அதிகம் சொல்ல வேண்டுவதில்லை. நல்ல மல்லிகையின் மணத்தையும், சூரியனின் பிரகாசத்தையும் ஜனங்களுக்குச் சொல்லவும் வேண்டுமோ! உயர்ந்த பரம்பரையில் வந்துள்ள அவர்கள் ஸ்ரீ புவனேச்வரீ மந்த்ர மஹிமையால் அடையும் பாக்கியங்களை தமது அனுபவம் மூலமாக இந்நூலிலேயே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள், வேதாகம புராணங்களிலிருந்தும், பிரபஞ்சஸாரம் முதலிய மந்த்ர சாஸ்திரங்களிலிருந்தும் ஸ்ரீ புவனேச்வரி மஹிமையையும், ஆராதனையையும் அழகாகவும், தெளிவாகவும் எடுத்துக் கூறியிருப்பது பாராட்டற்குரியது,

ஸ்ரீ புவனேச்வரியின் பக்தி பெருகிவரும் இந்நாளில் பக்தர்களுக்கு இந்நூல் மிகவும் பயன் தரும் என்பதில் ஐயமில்லை. ஸ்ரீ தீக்ஷிதர் அவர்கள் இந்நூலில் கூறியுள்ள விஷயங்களைப் படித்துணர்ந்து ஸ்ரீ புவனேச்வரியினிடத்

தில் அசஞ்சலமான பக்தி செலுத்துவதே ஸ்ரீ தீக்ஷிதர் அவர்களுக்குச் செய்யும் நன்றியாகும்.

ஆஸ்திகோத்தமர்கள் அனைவரும் பக்தி ச்ரத்தையுடன் ஸ்ரீ புவனேச்வரியை ஆராதித்து ஸகல ஸௌபாக்யங்களையும் பெற்று உய்வதுடன் ஸ்ரீ சாந்தானந்த யதிகளுடைய பரிபூர்ணமான அநுக்ரஹத்தையும் பெறப் பிரார்த்திக்கிறேன்.

இப்படிக்கு.

புவனேச்வரீ நகர்,
புதுக்கோட்டை,
24—5—63

வேதபாஷ்ய விசாரத, தர்மக்ஞ,
K. A. பஞ்சாபகேச தீக்ஷிதர்,
குடுமியாமலை.

உ

முகவுரை

ஸ்ரீ அம்பாளுக்கு சக்தியெனப்பெயர். இப்படிப்பட்ட சக்தியானது, உலகெங்கும் பரவியுள்ளது. இந்த சக்தியுள்ள ஜீவனையே உயிருள்ளது எனச்சொல்வது வழக்கம். ஸாமான்ய ஜீவனுக்கு மட்டுமல்ல, ஸ்ரீ சிவன்கூட சக்தியுடன் இருந்தால்தான் காரியத்தை செய்ய தகுதியுள்ளவர். அதனாலேயே நமது வேதம், மந்திரசாஸ்திரம் முதலியவைகள் சக்தியை உபாஸிக்கவேண்டிய முறையை பலவாறாக கூறியுள்ளன. அதனாலே, உபநிஷத்திலும் ஸ்ரீ பரமேச்வரனை கூறுமிடத்தில்,

उमासहायं परमेश्वरं प्रभुं
त्रिलोचनं नीलकण्ठं प्रशान्तम् ।
ध्यात्वा मुनिर्गच्छति भूतयोनिं
समस्तसाक्षिं तमसः परस्तात् ॥

ஸ்ரீ முக்கண்ணனான பரமேச்வரனை த்யானம் செய்து நிர்குணமான ஸ்வரூபமாக ஆவான் என்பதை கூறுமிடத்தில், சக்தியான உமையுடன். ஸ்ரீ பரமேச்வரனை த்யானம் செய்யவேண்டுமென கூறியுள்ளது. இப்படிப்பட்ட பராசக்தியை எப்பொழுதும் உபாசிக்கவேண்டும். அதிலும் ஆபத்துக்கள் வந்த சமயத்தில் தேவீதந்திரம் என்னும் நூலில் கூறியபடி,

राज्यभ्रंशो ह्यकस्माच्चेत् जनमारे महाभये ।
राजमारेऽश्वमारे च परचक्रभये तथा ॥

சத்ரு ராஜாக்களால் ராஜ்யத்திற்கு ஆக்ரமிப்பு ஏற்படும்போதும், ஜனங்களுக்கு மரணபயம் ஏற்படும்போதும், மிகுந்த பயம் உண்டாகும்போதும், தேசத்தலைவர்களுக்கு கஷ்டமேற்படும் போதும், ராஜ்யத்துக்கு அங்கமான குதிரை முதலியவைகளுக்கு பீடை ஏற்படும் போதும், பிறதேசத்தினர் பயத்தை உண்டுபண்ணும் போதும்,

इत्यादिविविधे दुःखे क्षयरोगादिजे भये ।
सहस्रचण्डिकापाठं कुर्याद्वा कारयेत्तथा ॥


இவ்வித பலவித துக்கங்கள் ஏற்பட்டபோதும், க்ஷய ரோகம் முதலிய மஹாரோகங்களின் பயம் ஏற்பட்ட போதும், ஆயிரம் ஆவ்ருத்தி ஸப்தசதீ பாராயணம் செய்து நவாக்ஷரீ மந்திரத்தை லக்ஷம் ஆவ்ருத்தி ஜபம் செய்து 100 ஆவ்ருதி ஸப்தசதி ஹோமமும், நவாக்ஷரீ மஹா மந்திரத்தால் பல ஹோமங்களும் செய்வதாகிய, ஸஹஸ்ர சண்டீ யாகத்தை செய்யவேண்டும். அல்லது உபாஸகர்களைகொண்டு செய்விக்கவேண்டும். இம்மாதிரி செய்வதால் ஸகல ஆபத்துக்களும் நிச்சயம் நீங்கும். இம்மாதிரி ஸஹஸ்ரசண்டீ யாகத்தை, சேந்தமங்கலம் ஸ்ரீ அவதூத ஸ்வாமிகளின் அனுக்ரஹத்துக்கு பரிபூர்ண பாத்ரர்களான ஸ்ரீ சாந்தானந்த ஸ்வாமிகள் என்னும் தபஸ்விகள் 2—6—63-ல் புதுக்கோட்டை ஸ்ரீ ஜட்ஜ் ஸ்வாமிகள் அதிஷ்டானத்தில், புவனேச்வரி ஸன்னிதியில் நடத்தப்போகிறார்கள். அந்த ஸமயத்தில் ஸ்ரீ புவனேச்வரி மகிமை என்னும் நூலை அச்சிடவேண்டுமென்றும், அதில் ஸ்ரீ புவனேச்வரியின் பெருமையையும், ஸ்ரீ புவனேச்வரிக்குச் செய்யும் அபிஷேகம், அர்ச்சனம், ஜபம், ஹோமம், பூஜை முதலியவற்றால் கிடைக்கும் நற்பயன்களை எழுதவேண்டுமென்றும்

ஸ்ரீ ஸஹஸ்ரசண்டீ யாகத்தை செய்யவேண்டிய முறைகளையும், அதனுல் கிடைக்கும் நற்பயன்களையும் எழுத வேண்டும் என கூறினுர்கள். அதன்பேரில் இந்த நூலை என் மஹா குருக்களான ஸ்ரீ மூத்தண்ணுவாளின் ஸமாதியை ஸ்மரித்துக்கொண்டு எழுதினேன். இதை ஆஸ்திகர்கள் படித்து, ஸ்ரீ புவனேச்வரீ மந்திரத்தையும், ஸ்ரீ நவாக்ஷரீ மந்திரம், ஸ்ரீ ஸப்தசதீ மஹா மந்திரம் இவைகளை நல்ல ஸத்குருக்களிடத்தில் உபதேசம் பெற்று ஜப ஹோமங்களை செய்யவேண்டும். இதனுல் ஸகலமங்களங்களும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் உண்டாகும். எங்கள் பெரியவாள் இந்த மந்திரங்களையே பொருளென நினைத்து உபதேசித்தார்கள், பல பக்தர்கள் இந்த மந்திரங்களை உபதேசம்பெற்று நன்கு ஜபித்து க்ஷேமத்தை அடைந்து வருகிருர்கள். ஸ்ரீ சாந்தானந்த ஸ்வாமிகள் தென்னுட்டில் ஸ்ரீ புவனேச்வரீ பிம்பம் இல்லாத குறையை நீக்கியதோடு ஸ்ரீ புவனேச்வரியின் படத்தை ஒவ்வொரு வீட்டிலும் வைத்து பூஜிக்கும்படி அச்சிட ஸ்ரீ வேணுகோபால சர்மா என்னும் சிறந்த பக்தரைக்கொண்டு சித்ரம் எழுதச்செய்து, வெகு அழகாக அமைந்துள்ளது. மேலும் சென்னை ஸ்ரீ வேணுகோபால சர்மா அவர்கள் பிரதிப் பிரயோஜனத்தை கோராமல் எழுதியுள்ளார். இந்த அழகிய படத்தை மதுரையில் நான் ராமாயணப் பிரவசனம் செய்யும்போது ஸ்ரீ பட்டாபிஷேகத்தன்று ஸ்ரீமான் P. T. ராஜன் அவர்கள் தலைமையில், மதுரையில் சொந்தக்காரர்களாகிய ஸ்ரீமான் சுந்தரம் செட்டியார் அவர்கள் திறந்துவைத்தார். அந்த சமயம் அந்த படத்தால் ஸ்ரீ புவனேச்வரி அம்பாளை பார்த்தவர்கள் யாவரும், மணித்வீபத்தில் ஸ்ரீ அம்பாளை நேரில் தரிசிப்பதாகவே நினைத்தார்கள்.

இந்தப் படத்தை ஆயிரக்கணக்கில் அச்சிட்டு, ஒவ்வொருவரும் பூஜையில் வைத்துக்கொள்ளும்படி ஸ்ரீ மான் சுந்தரம் செட்டியார் அவர்களே செய்ய ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இதில் கிடைக்கும் பொருளை ஸ்ரீ புவனேச்வரீ ஆலயத்திற்கே எடுத்துக்கொள்ளும்படி கூறிவிட்டார்கள் ஆஸ்திகர்கள் இந்தப் படத்தையும் ஒவ்வொரு வீட்டிலும் வைத்து பூஜை செய்யவேண்டும். புதுக்கோட்டையில் இருக்கும் ஸ்ரீ புவனேச்வரிக்கு பிரதி மாஸத்திலும் ஆஸ்திகர்கள் அபிஷேகம், அர்ச்சனைகள் செய்து, ஸ்ரீ புவனேச்வரியின் பிரசாதத்தால் ஸகல க்ஷேமங்களையும் அடையும்படி கோருகிறேன்.

இப்படிக்கு,

சேங்காலிபுரம், அனந்தராம தீக்ஷிதர்



ஸ்ரீ புவனேச்வரி

உ
|| श्रीः ||

ஸ்ரீ புவனேச்வரி மஹிமையும், அஷ்டலக்ஷ்மிகளையும் அளிக்கும் ஸ்ரீ ஸஹஸ்ர சண்டீ ஹோமமும்.

ஸ்ரீ அம்பாளை அறியாத ஜீவனே உலகில் இல்லை. மிருகங்கள் முதல் எல்லா பிராணிகளும் அறிந்துள்ளன. தொட்டிலில் இருக்கும் சிறு குழந்தையும் வயிற்றில் பசி தோன்றினாலும், வலி ஏற்பட்டாலும் அம்மா என அழைப்பதைக்காண்கிறோம். அதேபோல் பசு முதலியவைகளும் அம்மா என அழைக்கின்றன. ஆதலால்தான் ஸ்ரீ அம்பாளை அர்ச்சிக்கும் லலிதா ஸஹஸ்ரநாமத்தில் முதல் அர்ச்சனையில், ஸ்ரீ மாத்ரே நம: திருத்தாய்க்கு நமஸ்காரம் என்று அமைந்துள்ளது. ஆகவே நம் குறைகளை நீக்கி, கோரிய பலன்களை ஸ்ரீ அம்பாளே அளிப்பாள் என சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஸ்ரீ அம்பாளின் அருளால் பல கஷ்டங்கள் நீங்குகின்றன.

அதாவது நமக்கு பல கஷ்டங்கள் நேரும் ஸமயத்தில் ஸ்ரீ அம்பாள் பல உருவங்களாக வந்து நம்மைக் காக்கிருள், என்றும் நாம் அவ்வுருவங்களை ஸ்மரிக்க வேண்டிய முறையையும் லகுஸ்துதி என்ற நூலில் கூறப்பட்டுள்ளது.

लक्ष्मीं राजकुले जयां रणभुवि क्षेमंकरीमध्वनि,
क्रव्यादद्विपसर्पभाजि शवरीं कान्तारदुर्गे गिरौ ।
भूतप्रेतपिशाचजम्बुकभये स्मृत्वा महाभैरवीं
व्यामोहे त्रिपुरां तरन्ति विपदस्तारां च तोयप्लवे ॥

லக்ஷ்மீம் ராஜகுலே ஜயாம் ரணபுவி க்ஷேமங்கரீமத்வனி,
க்ரவ்யாத த்விபஸர்ப பாஜி சபரீம் காந்தாரதுர்கே கிரேள।
பூதப்ரேத பிசாச ஜம்புகபயே ஸ்ம்ருத்வா மஹாபைரவீம்,
வ்யாமோஹே த்ரிபுராம் தரந்தி விபதஸ்தாராம் ச
தோயப்லவே ॥

இராஜ குடும்பத்தில் ஸ்ரீ மகாலக்ஷ்மியாகவும், போர்களத்தில் விஜயலக்ஷ்மியாகவும், ராக்ஷஸர்கள், யானை, ஸர்பங்கள், முதலியவைகள் உள்ள மார்க்கத்தில் க்ஷேமங்கரியாகவும், (க்ஷேமத்தைச் செய்கிறவளாகவும்,) காடுகளால் செல்லமுடியாத மலையில் "சபரி" என்று பெயர் (வேடகுலத் தலைவியாக) உள்ளவளும், பூதங்கள், ப்ரேதங்கள், பிசாசுகள், நரிகள் இவைகளால் பயம் ஏற்படும் ஸமயத்தில் "மஹாபைரவி" என்ற பெயருள்ளவளாகவும், மனக்கலக்கமேற்பட்ட ஸமயத்தில் "த்ரிபுரா" என்ற பெயருள்ளவளாகவும், நதி, ஸமுத்ரம், முதலியவைகளைத் தாண்டும் ஸமயத்தில் "தாரா" என (கரைசேர்ப்பவள்) ப் பெயருள்ளவளாகவும் ஸ்ரீ அம்பாளை ஸ்மரித்து பலர் ஆபத்துகளிலிருந்து விடுபடுகிறார்கள்.

மேலும் ஸ்ரீ பரமேச்வரனுடைய ஒரே சக்தியே கார்ய காலங்களில் நான்கு விதமாக விளங்குகிறது.

एकैव शक्तिः परमेश्वरस्य भिन्ना चतुर्धा विनियोगकाले ।
भोगे भवानी पुरुषे च विष्णुः कोपे च काली समरे च दुर्गा ॥

ஏகைவ சக்தி: பரமேச்வரஸ்ய
பின்னா சதுர்த்தா விநியோககாலே।
போகே பவானீ புருஷே ச விஷ்ணு:
கோபே ச காளீ ஸமரே ச துர்கா ॥

போக காலத்தில் பவானியாகவும், புருஷனாக இருக்கும் காலத்தில் ஸ்ரீ விஷ்ணுவாகவும், கோப காலத்தில்

ஸ்ரீ காளியாகவும் யுத்த காலத்தில் ஸ்ரீ துர்கையாகவும் இருக்கிருள்.

இவ்விதம் எல்லா அபீஷ்டங்களை அளிப்பதிலும் விசேஷமாய் வித்யை, ஜயம் உலகில் மிக்க கீர்த்தி இவைகளை அளிப்பதிலும் ஸ்ரீ புவனேச்வரீயாக விளங்குகிருள். ஆகவே சாரதாதிலகம் என்னும் கிரந்தத்தில் "எந்த ஸ்ரீ புவனேச்வரீ தேவியை ப்ரம்மாதி தேவர்கள் உபாஸித்து நிரந்தரமான ஐச்வர்யத்தை அடைந்தார்களோ, அந்த ஜகன்மாதாவான ஸ்ரீ புவனேச்வரியைப் பற்றி இனி கூறுகிறேன்.

अथ वक्ष्ये जगद्धात्रीं अधुना भुवनेश्वरीम् ।
ब्रह्मादयोऽपि यां ज्ञात्वा लेभिरे श्रियमूर्जिताम् ॥

அத வக்ஷ்யே ஜகத்தாத்ரீம் அதுனா புவனேச்வரீம் ।
ப்ரம்மாதயோऽபி யாம் க்ஞாத்வா லேபிரே ச்ரியமூர்ஜிதாம் ॥"

என ஆரம்பித்துள்ளார்.

ஸ்ரீ பகவத்பாதாள், ப்ரபஞ்சஸாரம் என்னும் க்ரந்தத்தில்.

प्रत्यब्धसेकात् भविता शतायुः
मेधेन्द्रिरावान् रहितश्च रोगैः ।
मासेषु जन्मस्वभिषेकतः स्यात्
उर्वीपतिर्मङ्क्षु महापृथिव्याः ॥

ப்ரத்யப்தஸேகாத் பவிதா சதாயு:,
மேதேந்திராவான் ரஹிதச்ச ரோகை: ।
மாஸேஷு ஜன்மஸ்வபிஷேகதஸ் ஸ்யாத்,
உர்வீபதிர் மங்க்ஷு மஹா ப்ருதிவ்யா: ॥

ஸ்ரீ புவனேச்வரி அம்பாளுக்கு ப்ரதி வருஷமும் அபி ஷேகம் செய்தால், நூற்றுக்கணக்கான வயது, நல்ல புத்தியுடன், ஸ்ரீ மஹாலக்ஷ்மியின் அருளுடனும், வியாதி களற்றவனாய் ஜீவித்திருப்பான். ஒவ்வொரு மாதத்திலும் ஜன்ம நக்ஷத்திர தினத்தில் அபிஷேகம் செய்பவன் இப் பெரும்பூமியின் அரசனாக விளங்குவான், எனக் கூறியுள் ளார்கள்.

ஸ்ரீ ஜகன்மாதாவான ஸ்ரீ புவனேச்வரி மணித்விபம், என்றும் ஸர்வலோகம் என்றும் வழங்கப்படும் உலகில் வஸிக்கிறாள். இந்த உலகமானது ஸ்ரீ புவனேச்வரி தேவி யால் ப்ரம்ம லோகத்துக்கும், மேல் பாகத்தில் மனதினால் அமைக்கப்பட்டது. இந்த மணித்வீபம் என்னும் உலக மானது கைலாசம், வைகுண்டம், கோலோகம் மற்ற எல்லா உலகத்தைக் காட்டிலும் சிறந்தது. மூவுலகிலும் இதற்கு ஈடான அழகுவாய்ந்த பட்டணம் கிடையாது.

ब्रह्मलोकादूर्ध्वभागे सर्वलोकोऽस्ति यः श्रुतः ।
मणिद्वीपः स एवास्ति यत्र देवी विराजते ॥
सर्वस्मादधिको यस्मात् सर्वलोकस्ततः स्मृतः ।
कैलासादधिको लोकः वैकुण्ठादपि चोत्तमः ॥
गोलोकादपि सर्वस्मात् सर्वलोकोऽधिकः स्मृतः ।
नैतत्समं त्रिलोक्यां तु सुन्दरं विद्यते क्वचित् ॥

ப்ரம்மலோகாதூர்த்வ பாகே ஸர்வலோகோऽஸ்தி ய:
ச்ருத: ।
மணித்வீப: ஸ ஏவாஸ்தி யத்ர தேவீ விராஜதே ॥
ஸர்வஸ்மாததிகோ யஸ்மாத் ஸர்வ லோகஸ்ததஸ்ம்ருத: ।
கைலாஸாததிகோ லோக: வைகுண்டாதபி சோத்தம: ॥
கோலோகாதபி ஸர்வஸ்மாத் ஸர்வ லோகோऽதிக:
ஸ்ம்ருத: ।
நைதத்ஸமம் த்ரிலோக்யாம்து ஸுந்தரம் வித்யதே க்வசித் ॥

छत्रीभूतं त्रिजगतः भवसंतापनाशकम् ।
मणिद्वीपस्य परितः वर्तते तु सुधोदधिः ॥
यस्यास्तु पार्श्वभागेस्तः निधी तौ शङ्खपद्मकौ ॥
सा देवी भुवनेशानी तद्वामाङ्के विराजते ॥

சத்ரீபூதம் த்ரிஜகத : பவஸந்தாபநாசகம் ।
மணித்வீபஸ்ய பரித : வர்ததே து ஸுதோததி : ॥
யஸ்யாஸ்து பார்ச்வ பாகேஸ்த : நிதீ தௌ சங்கபத்மகௌ ।
ஸா தேவீ புவனேசானீ தத்வாமாங்கே விராஜதே ॥

இந்த மணித்வீபமானது மூன்று உலகத்தின் ஸம்ஸாரதாபத்தைப் போக்கும் குடைபோல் அமைந்துள்ளது.

அந்த மணித்வீபத்தைச் சுற்றிலும் அம்ருதமயமான ஸமுத்ரம் உள்ளது. அதன் அலைகள் நித்யம் மணித்வீபத்தை தொடுகின்றன. மணித்வீபத்திலுள்ள சங்கநிதி, பத்மநிதி இவ்விரண்டிற்கும் நடுவில் ஸ்ரீ புவனேச்வரீ அம்பாள் ஸ்ரீ பரமேச்வரனுடைய மடியில் நான்கு கைகளுடன் விளங்குகிறாள் எனக் கூறப்பட்டுள்ளது.

நித்ய யௌவனத்துடன் கூடிய ஸ்ரீமஹாதேவனுடன் ஸ்ரீ புவனேச்வரீ திவ்ய மஞ்சத்தில் மணித்வீபத்தில் விளங்குகிறாள் என்பதை தேவீபாகவதம் பல ச்லோகங்களால் கூறுகிறது.

चिन्तामणिगृहे राजच्छक्तितत्त्वात्मकैः परैः ।
सोपानैर्दशभिर्युक्तः मञ्चकोऽप्यधिराजते ॥
ब्रह्मा विष्णुश्च रुद्रश्च ईश्वरश्च सदाशिवः ।
एते मंचखुराः प्रोक्ताः फलकस्तु सदाशिवः ॥

तस्योपरि महादेवः भुवनेशो विराजते ।
या देवी निजलीलार्थं द्विधाभूता बभूव ह ॥
सृष्ट्यादौ तु स एवायं तदर्धाङ्गो महेश्वरः ।
कन्दर्पदर्पनाशोद्यत्कोटिकन्दर्पसुन्दरः ॥
पञ्चवक्त्रस्त्रिनेत्रश्च मणिभूषणभूषितः ।
हरिणाभीतिपरशून् वरं च निजबाहुभिः ॥
दधानः षोडशाब्दोऽसौ देवः सर्वेश्वरो महान् ।
कोटिसूर्यप्रतीकाशश्चन्द्रकोटिसुशीतलः ॥
शुद्धस्फटिकसंकाशः त्रिनेत्रश्शीतलद्युतिः ।

சிந்தாமணி க்ருஹே ராஜன் சக்தி தத்வாத்மகை : பரை :।
ஸோபாணைர் தசபிர்யுக்த : மஞ்சகோऽப்யதிராஜதே ॥
ப்ரும்மா விஷ்ணுச்ச ருத்ரச்ச ஈச்வரச்ச ஸதாசிவ :।
ஏதே மஞ்சகுரா : ப்ரோக்தா : பலகஸ்து ஸதாசிவ :॥
தஸ்யோபரி மஹாதேவ : புவனேசோ விராஜதே ।
யா தேவீ நிஜலீலார்த்தம் த்விதாபூதா பபூவ ஹ ॥
ஸ்ருஷ்ட்யாதௌ து ஸ ஏவாயம் ததர்த்தாங்கோ மஹேச்வர:
கந்தர்ப தர்ப நாசோத்யத்கோடி கந்தர்ப ஸுந்தர :॥
பஞ்ச வக்த்ரஸ்த்திரிநேத்ரச்ச மணிபூஷண பூஷித :।
ஹரிணபீதி பரசூன் வரம் ச நிஜபாஹுபி :॥
ததான: ஷோடசாப்தோऽஸௌ தேவஸ்ஸர்வேச்வரோ மஹான் ।
கோடிஸூர்ய ப்ரதீகாச : சந்த்ரகோடிஸுசீதள :॥
சுத்த ஸ்படிகஸங்காச : த்ரிநேத்ரச்சீதளத்யுதி :॥

வியாஸர் ஜனமேஜயன் என்னும் அரசனைப்பார்த்து ஓ ராஜன் மணித்வீபத்தில் பத்து சக்தி தத்துவங்களாகிற படிக்கட்டுகளுக்குமேல் ஓர் மஞ்சம் விளங்குகிறது. அம் மஞ்சப் பலகையாக விளங்குவது ஸ்ரீ சதாசிவம், அதன் நான்கு கால்களாக விளங்குகிறவர்கள் ப்ரும்மா, விஷ்ணு, ருத்ரன், ஈச்வரன் இவர்களே யாவார்கள். அதன்மீது ஸ்ரீ மஹாதேவன் உலகிற்கு ஈசனாக விளங்குகிறார். ஸ்ரீ புவனேச்வரீ தேவியானவள் விளையாடவேண்டி தானே இரண்டு உருவங்களாக விளங்குகிறாள். ஸ்ருஷ்டியின் ஆரம்பகாலத்தில் ஸ்ரீ அம்பாளின் ஓர் பாகமான அந்த மஹேச்வரனே மன்மதனின் கொழுப்பைப் போக்கும் கோடி மன்மதனுக் கொப்பான அழகு வாய்ந்தவரும், ஐந்து முகமுள்ளவரும், மூன்று கண்களுள்ளவரும், ரத்னாபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவரும், மான், அபய முத்ரை, பரசு, வரத முத்திரை, இவைகளை கைகளில் கொண்டவரும், பதினாறு வயது உடையவரும், தேவனும், ஸர்வேச்வரனும், மஹானும், கோடி ஸூர்யனுக் கொப்பான காந்தி உள்ளவரும். கோடி சந்திரனைப்போல் குளிர்ச்சியாய் இருப்பவரும், சுத்தமான ஸ்படிகம்போல் நிறமுள்ளவரும், குளிர்ச்சிகொண்ட காந்தியுள்ளவருமாக விளங்குகிறார்.

वामाङ्के सन्निषण्णास्य देवी श्रीभुवनेश्वरी ।
नवरत्नगणाकीर्ण काञ्चीदामविराजिता ।
तप्तकाञ्चनसन्नद्ध वैढूर्याङ्गदभूषणा ॥
कनच्छ्रीचक्रताटङ्कविटङ्कवदनाम्बुजा ।
ललाटकान्तिविभव विजितार्धसुधाकरा ॥
बिंबकान्तितिरस्कारि रदच्छदविराजिता ।
लसत्कुंकुमकस्तूरी तिलकोद्भासितानना ॥
दिव्यचूडामणिस्फार चञ्चच्चन्द्रकसूर्यका ।
उद्यत्कविसमस्वच्छ नासाभरणभासुरा ॥

चिन्ताकलस्वितस्वच्छ मुक्तागुच्छविराजिता ।
पाटीरपङ्ककर्पूर कुंकुमालंकृतस्तनी ॥
विचित्रविविधाकल्पा कम्बुसंकाशकन्धरा ।
दाडिमीफलबीजाभ दन्तपंक्तिविराजिता ॥
अनर्घ्यरत्नघटित मुकुटांचितमस्तका ।
मत्तालिमालाविलसदलकाढ्यमुखांबुजा ॥
कलङ्ककार्श्यनिर्मुक्त शरच्छन्द्रनिभानना ।
जाह्नवीसलिलावर्त शोभिनाभिविभूषिता ॥
माणिक्यशकलाबद्ध मुद्रिकांगुलिभूषिता ॥
पुण्डरीकदलाकार नयनत्रयसुन्दरी ॥
कल्पिताच्छमहाराग पद्मरागोज्ज्वलप्रभा ।
रत्नकिङ्किणिकायुक्त रत्नकङ्कणशोभिता ॥
मणिमुक्तासरापार लसत्पदकसन्ततिः ।
रत्नांगुलिप्रवितत प्रभाजाललसत्करा ॥
कंचुकीगुम्फितापार नानारत्नततिद्युतिः :
मल्लिकामोदधम्मिल्ल मल्लिकालिसरावृता ॥
सुवृत्त निबिडोत्तुङ्ग कुचभारालसा शिवा ।
वरपाशांकुशाभीति लसद्बाहुचतुष्टया ॥
सर्वशृङ्गारवेषाढ्या सुकुमारांगवल्लरी ।
सौन्दर्यधारा सर्वस्वा निर्व्याजकरुणामयी ॥
निजसल्लापमाधुर्य विनिर्भर्त्सितकच्छपी ।
कोटिकोटि रवीन्दूनां कान्ति या बिभ्रती परा ॥
नानासखीभिर्दासीभिस्तथा देवाङ्गनादिभिः ।
सर्वाभिर्देवताभिस्तु समन्तात्परिवेष्टिता ॥

इच्छाशक्त्या ज्ञानशक्त्या क्रियाशक्त्या समन्विता ।
लज्जा तुष्टिस्तथा पुष्टिः कीर्तिः कान्तिः क्षमा दया ॥
बुद्धिर्मेधा स्मृतिर्लक्ष्मीः मूर्तिमत्योंगनाः स्मृताः ।
जया च विजया चैवप्यजिता चापराजिता ॥
नित्या विलासिनी दोग्ध्री त्वघोरा मङ्गलानवा ।
पीठशक्तय एतास्तु सेवन्ते यां पराम्बिकाम् ॥
यस्यास्तु पार्श्वभागे स्तः निधी तौ शङ्खपद्मकौ ।
नवरत्नवहा नद्यस्तथा वै कांचनस्रवाः ॥
सप्तधातुवहा नद्यो निधिभ्यां तु विनिर्गताः ।
सुधासिन्ध्वंतगामिन्यस्ताः सर्वा नृपसत्तम ॥
सा देवी भुवनेशानी तद्वाङ्के विराजते ॥

வாமாங்கே ஸன்நிஷண்ணாஸ்ய தேவீ ஸ்ரீ புவனேச்வரீ ।
நவரத்னகணு கீர்ண காஞ்சீ தாம விராஜிதா ॥
தப்த காஞ்சன ஸன்னத்த வைதூர்யாங்கத பூஷணு ॥
கனச்ச்ரீ சக்ர தாடங்க விடங்கவதனும்புஜா ।
லலாட காந்தி விபவ விஜிதார்த ஸுதாகரா ॥
பிம்ப காந்தி திரஸ்காரி ரதச்சதவிராஜிதா ।
லஸத் குங்கும கஸ்தூரி திலகோத் பாஸிதானணு ॥
திவ்ய சூடாமணி ஸ்பார சஞ்சச்சந்த்ரக ஸூர்யகா ।
உத்யத் கவி ஸமஸ்வச்ச நாஸாபரண பாஸுரா ॥
சிந்தாகலம்பித ஸ்வச்ச முக்தா குச்ச விராஜிதா ।
பாடீரபங்க கர்பூர குங்குமாலங்க்ருஸ்தநீ ॥
விசித்ரவிவிதாகல்பா கம்புஸங்காச கந்தரா ।
தாடிமீபல பீஜாப தந்தபங்தி விராஜிதா ॥

அனர்க்ப ரத்னகடித முகுடாஞ்சித மஸ்தகா ।
மத்தாலிமாலா விலஸதலகாட்ய முகாம்புஜா ॥
கலங்க கார்ச்ய நிர்முக்த சரச்சந்த்ரநிபாநநா ।
ஜான்னவீ ஸலிலாவர்த சோபி நாபிவிபூஷிதா ॥
மாணிக்ப சகலாபத்த முத்ரிகாங்குலி பூஷிதா ।
புண்டரீக தளாகார நயனத்ரய ஸுந்தரீ ॥
கல்பிதாச்வச்ச மஹாராக பத்ம ராகோஜ்வலப்ரபா ।
ரத்ன கிங்கிணிகாயுக்த ரத்ன கங்கண சோபிதா ॥
மணி முக்தாஸராபார லஸத்பதக ஸந்ததி : ।
ரத்னுங்குலி ப்ரவிதத ப்ரபாஜால லஸத்கரா ॥
கஞ்சுகீ கும்பிதாபார நாநாரத்ன ததித்யுதி : ।
மல்லிகாமோத தம்மில்ல மல்லிகாலி ஸராவ்ருதா ॥
ஸுவ்ருத்த நிபிடோத்துங்க குசபாராலஸா சிவா ।
வர பாசாங்குசாபீதி லஸத்பாஹு சதுஷ்டயா ॥
ஸர்வச்ருங்கார வேஷாட்யா ஸுகுமாராங்க வல்லரீ ।
ஸௌந்தர்ய தாரா ஸர்வஸ்வா நிர்வ்யாஜ கருணுமயீ ॥
நிஜஸல்லாப மாதுர்ய விநிர்பர்த்ஸித சச்சபீ ।
கோடி கோடிரவீந்தூநாம் காந்திம் யா பிப்ரதீ பரா ॥
நாநாஸகீபிர் தாஸீபி : ததா தேவாங்கனுதிபி : ।
ஸர்வாபிர் தேவதாபிஸ்து ஸமந்தாத் பரிவேஷ்டிதா ॥
இச்சா சக்த்யா க்ஞானசக்த்யா க்ரியாசக்த்யா ஸமன்விதா ।
லஜ்ஜாதுஷ்டிஸ்ததா புஷ்டி : கீர்தி : காந்தி : க்ஷமா தயா ॥
புத்திர்மேதா ஸ்மிருதிர்லக்ஷ்மீ : மூர்திமத்யோங்கனு : ஸ்மிருதா : ॥
ஜயா ச விஜயா சைவாப்யஜிதா சாபராஜிதா ॥

நித்யா விலாஸினீ தோக்த்ரீ த்வகோரா மங்களா நவா ।
பீடசக்தய ஏதாஸ்து ஸேவந்தே யாம் பராம்பிகாம் ॥

யஸ்யாஸ்து பார்ச்வபாகேஸ்த : நிதீ தேள சங்கபத்மகேள ॥
நவரத்னவஹா நத்ய : ததா வை காஞ்சநஸ்ரவா : ।

ஸப்ததாதுவஹா நத்ய : நிதிப்யாந்து விநிர்கதா: ।
ஸுதாஸிந்த்வந்த காமின்ய : தாஸ்ஸர்வா ந்ருபஸத்தம ॥

ஸா தேவீ புவனேசானீ தத்வாமாங்கே விராஜதே ॥

அப்படிப்பட்ட ஸ்ரீ மஹாதேவனுடைய இடது மடியில் மங்களமாய் அமர்ந்தவளும், தேவியும், பல நவரத்னங்கள் இழைத்த ஒட்டியாணத்தால் விளங்குகிறவர்களும், சுத்த தங்கத்தில் இழைக்கப்பட்ட வைடூர்ய மயமான தோள் வளையை அணிந்தவளும், ப்ரகாசிக்கின்ற ஸ்ரீ சக்ரமாகிற, தாடங்க (கர்ணபூஷணத்தால் அழகு வாய்ந்த தாமரை போன்ற முகமுடையவளும், நெற்றிச் சோபையின் பெருமையால் ஜெயிக்கப்பட்ட அர்தசந்திரனை உடையவளும், கோவைப்பழத்தின் காந்தியை வெல்லும் உதடுகளோடு விளங்குகிறவளும், பிரகாசிக்கின்ற குங்குமத்தினுலும், கஸ்தூரீ திலகத்தினுலும், விளங்குகின்ற முகத்தை உடையவளும், திவ்ய சூடாமணியில் ஒளிக்கின்றவளும், அசைகின்ற சந்திரன், சூரியன் போன்றதுகளுமான சந்திரபிரபை, சூரியப்ரபை என்ற ஆபரணத்தோடு கூடியவளும், உதயமாகும் சுக்ரன் போன்ற சுத்தமான மூக்குத்தியுடன் கூடியவளும், அட்டிகையில் தொங்கும்(சுத்த)நல்லமுத்துக் கொத்துகளோடு விளங்குகிறவளும், சந்தனக்குழம்பு பச்சைக்கற்பூரம், குங்குமம், இவைகளால் அலங்கரிக்கப்பட்ட ஸ்தனங்களை உடையவளும், ஆச்சரியமான பலவித ஆபரணங்களை அணிந்தவளும், சங்கம் போன்ற கழுத்தை உடையவளும் மாதுளை முத்துக்கள் போன்ற பற்களோடு கூடியவளும், விலை உயர்ந்த ரத்னங்கள் இழைத்த கிரீடத்தோடு விளங்

கும் தலையை உடையவளும், மதங்கொண்ட வண்டுகளின் வரிசைபோல் விளங்கும் அலகங்கள் நிரம்பிய முகத்தை உடையவளும், களங்கம், குறைவு இவைகளற்ற சரத் காலத்திய சந்திரன் போன்ற முகமுள்ளவளும், கங்கா ஜலத்திய சுழல் போன்ற நாபியோடு விளங்குகிறவளும், மாணிக்கக் கற்களால் இழைக்கப்பட்ட முத்திரை மோதிரத்தால் அலங்கரிக்கப்பட்டவளும், தாமரை தளம் போன்ற மூன்று கண்களால் அழகு வாய்ந்தவளும், நன்கு பட்டை தீட்டியதால் தெளிவான மிக்கச் சிவந்த பத்மராகம் போல் விளங்கும் நிறமுள்ளவளும், ரத்னங்களாலான சிறு மணிகள் சேர்த்த ரத்ன கங்கணங்களால் விளங்குகிறவளும், மணிகள், முத்துக்கள் இவைகளாலான சரங்களில் தொங்கும் விலையுயர்ந்ததாய் விளங்கும் பதக்கங்களோடு கூடியவளும், ரத்தின மோதிரத்தின் பரவிய ஒளிகளால் விளங்கும் கைகளை உடையவளும், மேலங்கியில் (ரவிக்கையில்) கோர்க்கப்பட்ட விலையுயர்ந்த ரத்னங்களின் காந்தியோடு கூடியவளும், மல்லிகை வாசனையுற்ற கொண்டையில் சூடிய மல்லிகை சரத்தில் உள்ள வண்டுகளோடு கூடியவளும், நன்கமைந்த கொங்கையின் சுமையால் வணங்கியவளும், மங்கள ஸ்வரூபிணியும், வரதமுத்ரை, பாசமுத்ரை, அங்குசமுத்ரை அபயமுத்திரை இவைகளை நான்கு கைகளில் கொண்டவளும், பல சிருங்கார ரஸத்தை அளிக்கக்கூடிய வேஷத்தோடு கூடியவளும், கொடி போல் மென்மையான அவயவங்களை உடையவளும், அழகுப்ரவாகத்தின் பொக்கிஷமாய் இருப்பவளும், நிர்வ்யாஜமான கருணை உருவமாய் இருப்பவளும், தன் பேச்சின் இனிமையால் தோல்வி அடைவிக்கப்பட்ட "கச்சபி" என்ற வீணையை உடையவளும், கோடி கோடி சூர்யன் சந்த்ரன் இவர்களின் காந்தியை தரிப்பவளும், மிகச்சிறந்தவளும், நான்கு பக்கத்திலும் பல தோழிகளாலும், வேலைக்காரிகளாலும், தேவஸ்திரீகளாலும், எல்லா தேவர்களாலும் சூழப்பட்டவளும், இச்சாசக்தி, க்ரியா சக்தி, க்ஞான சக்தி இவர்களோடு கூடியவளுமான

ஸ்ரீ புவனேச்வரி அம்பாள், மணித்வீபத்தில் விளங்குகிருள். மேலும் லஜ்ஜை, துஷ்டி. புஷ்டி, கீர்த்தி, காந்தி, க்ஷமை, தயை, புத்தி, மேதை ஸ்மிருதி, லக்ஷ்மி இவர்கள் திவ்யஸ்திரீகளின் உருவம்கொண்டு சூழ்ந்து நிற்கிருர்கள். ஜயா, விஜயா, அஜிதா, அபராஜிதா, நித்யா. விலாஸினீ, தோக்த்ரீ, அகோரா, மங்களா, நவா, இப்பீட சக்திகள் அந்த சிறந்த தாயான ஸ்ரீ புவனேச்வரியை ஸேவிக்கிருர்கள். எந்த ஸ்ரீ அம்பிகையான புவனேச்வரியின் இரண்டு பக்கங்களில் சங்கநிதி, பத்மநிதி, இவைகள் இருக்கின்றனவோ, அந்த நிதிகளிலிருந்து உண்டானதுகளும். ரத்னங்கள், ஸப்ததாதுக்கள் இவைகளை வஹிக்கிறதுகளும், ஸ்வர்ண மயமான ப்ரவாகத்தை உடையதுகளுமான நதிகள், மணித்வீபத்தின் சுற்றிலுமுள்ள அமிருதமயமான கடலில் போய் விழுகின்றன. இவ்வித பெருமை, பெருமையுள்ள ஸ்ரீ புவனேச்வரி அம்பாள், புவனேச்வரரான ஸ்ரீ பரமேச்வரனுடைய, இடது மடியில் விளங்குகிருள்.

ஸ்ரீ பகவத்பாதாள் ப்ரபஞ்ச ஸாரத்தில் —

उद्यद्भास्वत्समाभां विजितनवजपामिन्दुखण्डावनद्ध-
द्योतन्मौळिं त्रिणेत्रां विविधमणिलसत्कुण्डलां पद्मगां च ।
हारग्रैवेयकाञ्चीगुणमणिवलयाद्यैर्विचित्रांबराढ्यां
अम्बां पाशांकुशेष्टाभयकरकमलामम्बिकां तां नमामि ॥

உத்யத் பாஸ்வத்ஸமாபாம் விஜிதநவஜபாமிந்து
கண்டாவநத்த—
த்யோதந்மௌளிம் த்ரிணேத்ராம் விவிதமணிலஸத்
குண்டலாம் பத்மகாம் ச ।
ஹாரக்ரைவேய காஞ்சீகுண மணிவலயாத்யைர்
விசித்ராம்பராட்யாம்
அம்பாம் பாசாங்குசேஷ்டாபய கரகமலாமம்பிகாம் தாம்
நமாமி ॥

உதய கால சூரியன் போன்ற காந்தியுள்ளவளும், புதிய (ஜபா) சம்பரத்தம் பூவை வெல்லும் நிறமுள்ளவளும், சந்திரகலையால் அலங்கரிக்கப்பட்ட தலையை உடையவளும், மூன்று கண்களுடன் கூடியவளும், பல இரத்தினங்களிழைத்த குண்டலங்கள் அணிந்தவளும், தாமரைப்பூவில்வீற்றிருப்பவளும், முக்தாஹாரங்கள் அட்டிகை, ஒட்டியாணம், இரத்தின வளையல்கள், முதலியவைகளாலும், பல நிறமுள்ள வஸ்திரத்தாலும் அலங்கரிக்கப்பட்டவளும், பாசம், அங்குசம், வரதமுத்திரை, அபயமுத்திரை இவைகளை தாமரை போன்ற கைகளில் கொண்டவளும், உலகத்தாயுமான ஸ்ரீ புவனேச்வரீ அம்பாளை நான் நமஸ்கரிக்கிறேன், எனக் கூறியுள்ளார்.

இம்மாதிரி விளங்கும் ஸ்ரீ புவனேச்வரீ அம்பாளை நினைத்தமாத்திரத்தில் ஏழ்மை, துக்கம், ரோகம் முதலிய திங்குகள் நீங்கும்.

தேவீ பாகவதத்தில்

इति ते वर्णितं राजन् मणिद्वीपं महत्तरम् ।
महादेव्याः परं स्थानं सर्वलोकोत्तमोत्तमम् ॥
एतस्य स्मरणात्सद्यः सर्वं पापं विनश्यति ।
प्राणोत्क्रमणसन्धौ तु स्मृत्वा तत्रैव गच्छति ॥
अध्यायपञ्चकं त्वेतत् पठेन्नित्यं समाहितः ।
भूतप्रेतपिशाचादिबाधा तत्र भवेन्नहि ॥

இதி தே வர்ணிதம் ராஜன் மணித்வீபம் மஹத்தரம் ।
மஹாதேவ்யா: பரம் ஸ்தானம் ஸர்வலோகோத்தமோத்த- [மம் ॥
ஏதஸ்ய ஸ்மரணாத் ஸத்ய: ஸர்வம் பாபம் வினச்யதி ।
ப்ராணோத்க்ரமணஸந்தௌ து ஸ்ம்ருத்வா தத்ரைவ
கச்சதி ॥

அத்யாய பஞ்சகம் த்வேதத் படேந்நித்யம் ஸமாஹித:।
பூதப்ரேத பிசாசாதி பாதா தத்ர பவேந்ந ஹி ॥

மிக்கப் பெரியதும் எல்லா உலகத்திற்கும் மிக மிகச் சிறந்ததுமான இந்த மணித்வீபமானது ஸ்ரீ புவனேச்வரி அம்பாளுக்கு மிகுந்தப்ரியமான ஸ்தானம். இந்த மணித்வீபத்தை நினைத்தமாத்திரத்தாலேயே எல்லா பாபமும் நாசமடைகிறது. இதை அந்திம காலத்தில் நினைப்பவன் அவ்வுலகிற்கு செல்கிறான். இப்படி மணித்வீபத்தையும், ஸ்ரீ புவனேச்வரீ அம்பாளையும் வர்ணித்திருக்கும் இவ்வைந்து அத்யாயங்களை தினந்தோறும் ஒருமைப்பட்ட மனதுடன் படிப்பானேயாகில் அங்கு பூதங்கள், ப்ரேதங்கள், பிசாசுகள் முதலியவைகளால் ஏற்படும் துன்பங்கள் இராது.

இவ்விதம் நமது க்லேசங்களை ஸ்ரீ அம்பாளே போக்க வல்லவள் என,

न मन्त्रं नो यन्त्रं तदपि न जाने स्तुतिमहो
न चाह्वानं ध्यानं तदपि च न जाने स्तुतिकथाः ।
न जाने मुद्रास्ते तदपि च न जाने विलपनं
परं जाने मातः त्वदनुसरणं क्लेशहरणम् ॥

ந மந்த்ரம் நோ யந்த்ரம் ததபி ச ந ஜாநே ஸ்துதிமஹோ
ந சாஹ்வாநம் த்யானம் ததபி ச ந ஜாநே ஸ்துதிகதா:।
ந ஜானே முத்ராஸ்தே ததபி ச ந ஜானே விலபனம்
பரம் ஜானே மாத: த்வதநுஸரணம் க்லேசஹரணம் ॥

ஹே அம்மா தங்களுடைய ஓர் மந்திரத்தையோ யந்திரத்தையோ அல்லது தங்கள் ஸ்தோத்திரத்தையோ அழைப்பதையோ தியானம் செய்வதையோ தங்கள் ஸ்துதிகள், சரித்திரங்கள் முதலியவைகளையோ,

முத்திரைகளையோ அல்லது புலம்புவதையோ, ஒன்றை யும் நான் அறியவில்லை. ஆனால் க்லேசத்தைப் போக்கும் தங்களை ஆச்ரயிப்பது ஒன்றே மேலானது என அறி வேன் எனக் கூறப்பட்டுள்ளது.

ஸ்ரீ பகவத்பாதாளான ஸ்ரீ ஆசார்யாள் ஸ்ரீ புவனேச் வரீ தேவியின் மூல மந்திரமான மாயாபீஜத்தின் பெரு மையைக் கூறும் கல்யாணவ்ருஷ்டிஸ்தவம் என்ற ஸ்தோத்திரத்தில்,

ह्रीं ह्रीमिति प्रतिदिनं जपतां तवाख्यां
किं नाम दुर्लभमिह त्रिपुराधिवासे ।
मालाकिरीट मदवारण माननीया
तान्सेवते वसुमती स्वयमेव लक्ष्मीः ॥

ஹ்ரீம் ஹ்ரீமிதி ப்ரதிதினம் ஜபதாம் தவாக்யாம்
கிம் நாம துர்லபமிஹ த்ரிபுராதிவாஸே ।
மாலாகிரீட மதவாரண மாநநீயா
தான் ஸேவதே வஸுமதீ ஸ்வயமேவ லக்ஷ்மீ: ॥

ஸ்தூலம், சூக்ஷமம், காரணம் இம்மூன்று சரீரத்தில் வஸிக்கிறவளான ஓ புவனேச்வரீ, தங்கள் பெயரான ஹ்ரீம், ஹ்ரீம் என்ற மந்திரத்தை தினந்தோறும் ஜபிக் கிறவர்களுக்கு இவ்வுலகில் அடைய முடியாதது என்ன இருக்கிறது? ஸ்ரீ மஹாலக்ஷ்மியானவள் தானே புஷ்ப மாலைகள், கிரீடம், இவைகளை எடுத்துக்கொண்ட மத யானையால் கொண்டாடப்படுகிறவளாய் நிறைய ஸ்வர் ணம், ரத்னம், இவைகளை (கையில்) கொண்டவளாகவும், இந்த மந்திர ஜபம் செய்கிறவர்களின் ஸமீபம் வந்து ஸேவிக்கிருள். மேலும்,

ह्रींकारमेव तव नाम गृणन्ति वेदाः
मातस्त्रिकोणनिलये त्रिपुरे त्रिणेत्रे ।
त्वत्संस्मृतौ यमभटाभिभवं विहाय
दीव्यन्ति नन्दनवने सह लोकपालैः ॥

ஹ்ரீங்காரமேவ தவ நாம க்ருணந்தி வேதா:
மாதஸ் த்ரிகோணநிலயே த்ரிபுரே த்ரிநேத்ரே ।
த்வத் ஸம்ஸ்ருதௌ யம படாபிபவம் விஹாய
தீவ்யந்தி நந்தன வநே ஸஹ லோகபாலை: ॥

ஸ்ரீ புவனேச்வரீ மந்திரமான ஹ்ரீம் என்ற சொல்லே தங்கள் பெயர் என்று வேதங்கள் கூறுகின்றன. த்ரிகோணத்திலிருப்பவளும், (த்ரிபுரையும், ஜாக்ரத், ஸ்வப்ன ஸுஷுப்தி என்ற மூன்றுநிலையிலும் ஸாக்ஷியாக இருப்பவளும், மூன்று கண்களை உடையவளுமான ஹே அம்மா, தங்களை நினைத்தமாத்திரத்தில், யம படர்களிடமிருந்து அவமானமடையாமல் லோகபாலகர்களுடன் நந்தன வனத்தில் விளையாடுகின்றனர் என்றும் மேலும்,

ह्रींकारमेव तव नाम तदेव रूपं
त्वन्नामदुर्लभमिह त्रिपुरे गृणन्ति ।
त्वत्तेजसा परिणतं वियदादिभूतं
सौख्यं तनोति सरसीरुहसंभवादेः ॥

ஹ்ரீம்காரமேவ தவ நாம ததேவ ரூபம்
த்வந்நாம துர்பலமிஹ த்திரிபுரே க்ருணந்தி ।
த்வத் தேஜஸா பரிணதம் வியதாதிபூதம்
ஸௌக்கியம் தனோதி ஸரஸீருஹ ஸம்பவாதே: ॥

ஹ்ரீம் என்ற சொல்லே தங்கள் பெயரென்றும், அதே தங்கள் ஸ்வரூப மென்றும் இந்த நாமம் இவ்வுலகில் கிடைப்பது மிக அரிது என்றும் கூறுகிறார்கள். ஹே த்ரிபுரே, தங்களுடைய தேஜஸ்ஸால் ஆகாசம் முதலிய பூதங்கள் உண்டானதாயும், அவைகள் உலகமாக ஆகி பிரும்மா முதலியவர்களுக்கு ஸௌக்யத்தைக் கொடுப்பதாகவும் சொல்லுகின்றனர்.

ह्रींकारत्रयसंपुटेन महता मन्त्रेण सन्दीपितं
स्तोत्रं यः प्रतिवासरं तव पुरोमातर्जपेन्मन्त्रवित् ।
तस्य क्षोणिभुजो भवन्ति वशगाः लक्ष्मीश्चिरस्थायिनी
वाणी निर्भरसूक्तिभारभरिता जागर्ति दीर्घं वयः ॥

ஹ்ரீம்காரத்ரயஸம்புடேன மஹதா மந்த்ரேண ஸந்தீபிதம்
ஸ்தோத்ரம் ய: பிரதிவாஸரம் தவ புரோ மாதர்ஜபேன் மந்த்ரவித் ।
தஸ்ய க்ஷோணிபுஜோ பவந்தி வசகா: லக்ஷ்மீச் சிரஸ்தாயிநீ
வாணீ நிர்பர ஸூக்திபார பரிதா ஜாகர்த்தி தீர்கம் வய: ॥

ஸ்ரீ புவனேச்வரீ மந்திரமான ஹ்ரீம் என்று மூன்று முறை சேர்த்த சிறந்த மந்திரத்தால் விளங்குகிற இந்த ஸ்தோத்திரத்தை எந்த மந்திரமறிந்தவன் ஹே அம்மா, தங்கள் முன்னிலையில் தினந்தோறும் ஜபிப்பானோ, அவனுக்கு அரசர்கள் வசமாகிறார்கள். அவனிடம் ஸ்ரீ மஹாலக்ஷ்மீ நிலைத்திருப்பாள். அவனுடைய பேச்சு சுத்தமான நல்ல சொற்கள் நிறைந்ததாயிருக்கும். அவன் நீண்ட காலம் ஜீவித்திருப்பான்.

வட நாட்டில் ப்ருத்வீதரர் என்ற ஓர் மஹான் இருந்தார். அவர் ஸ்ரீ புவனேச்வரீ தேவியை பல வருஷங்கள் வழிபட்டு வந்தவர். ஸ்ரீ புவனேச்வரீ மந்திரத்தை எப்

பொழுதும் ஜபம் செய்வதும், பூஜிப்பதும் ஸ்துதிப்பதும் இவ்விதமே தனது வாழ்நாளை கழித்து வந்ததுடன், ஸ்ரீ புவனேச்வரீ அம்பாளின் சில ஸ்தோத்திரங்களையும், பூஜாவிதானங்களையும் லோகோபகாரமாக எழுதியுள்ளார். இவ்விதம் ஒருதினம் பலச்சுலோகங்களால் ஸ்ரீ அம்பாளின் மந்திரம், ஜபம், ஹோமம், பூஜை, ஸ்தோத்திரம், இவைகளின் பெருமையை ப்ரதிக்ஷணமும் கண்ணீர் வடித்துக்கொண்டு கூறினர். இதைக்கண்ட ஸ்ரீ புவனேச்வரீ அம்பாள் ப்ருத்வீதரருடைய எதிரில் தோன்றி, வரனை அளித்து அவரது ஹ்ருதயத்தில் ப்ரவேசித்து புதிது புதிதான சாஸ்திரங்களின் உண்மையைக்கூறும் சொற்களாக அவரது முகத்திலிருந்து வெளிவந்தாள்.

इत्थं प्रतिक्षणमुदश्रुविलोचनस्य
पृथ्वीधरस्य पुरतः स्फुटमाविरासीत् ।
दत्वा वरं भगवती हृदयं प्रविष्टा
शास्त्रैः स्वयं नवनवैश्च मुखेऽवतीर्णा ॥

இத்தம் ப்ரதிக்ஷண முதச்ரு விலோசனஸ்ய
ப்ருத்வீதரஸ்ய புரத: ஸ்புடமாவிராஸீத் ।
தத்வா வரம் பகவதீ ஹ்ருதயம் ப்ரவிஷ்டா
சாஸ்த்ரை: ஸ்வயம் நவ நவைச்ச முகேऽவதீர்ணா ॥

மேலும் ஜ்யோதிர் மயமான ஸ்ரீ புவனேச்வரியை அவளது மந்திரத்தால் உபாஸிப்பவர்களுக்கு கிடைக்கும் பாக்யத்தைக் கூறும் வாயிலாக அப்பொருளைத் தானும் வேண்டுகிறார்.

तस्मान्नन्दनचार चन्दनतरुच्छायासु पुष्पासव-
स्वैरास्वादनमोदमान मनसा मुग्धामवामभ्रुवाम् ।
वीणाभङ्गितरङ्गित स्वरचमत्कारोऽपि सारोज्झितः
येन स्यादिह देहि मे तदभितः सञ्चारि सारस्वतम् ॥

தீஸ்மாங்நந்தன சாரு சந்தன தருச்சாயாஸு புஷ்பாஸவ-
ஸ்வைராஸ்வாதன மோதமான மநஸாமுத்தாம
வாமப்ருவாம் ।
வீணுபங்கி தரங்கித ஸ்வர சமத்காரோऽபி ஸாரோஜ்ஜித:
யேந ஸ்யாதிஹ தேஹி மே ததபித: ஸஞ்சாரி ஸாரஸ்வதம் ॥

ஓ புவனேச்வரி, தங்களது மந்திரத்தை ஜபித்தால் தேவலோகத்தில் நந்தனவனத்திலுள்ள அழகிய சந்தன மரங்களின் நிழல்களில் அமர்ந்து அங்குள்ள பூக்களின் தேனை இஷ்டப்படி குடித்து மனக்களிப்புற்ற அழகிய புருவம் வாய்ந்த தேவப்பெண்களின் வீணுவாத்யத்தின் இனிமையான ஸ்வர விந்யாஸங்களையும், ஸாரமற்றதாகச் செய்கிறதும், யாவராலும் அனுபவிக்கத்தகுந்ததானதுமான வாக் விலாசத்தை எனக்கு அளிக்கவேண்டும்.

மேலும் யமனைக் கூடியதும் ஸ்ரீ புவனேச்வரியின் உபாஸனமே எனக்கூறும்.

एवं त्वाममृतेश्वरीं अनुदिनं राकानिशाकामुक-
स्वान्ते सन्ततभासमानवपुषं साक्षाद्यजन्ते तु ये ।
ते मृत्यो कबलीकृतत्रिभुवनाभोगस्य मौळौ पदं
दत्वा भोगमहोदधौ निरवधि क्रीडन्ति तैस्तैस्सुखैः ॥

ஏவம் த்வாமம்ருதேச்வரீம் அனுதினம் ராகாநிசாகாமுக-
ஸ்வாந்தே ஸந்ததபாஸமான வபுஷம் ஸாக்ஷாத்யஜந்தேது
யே ।
தே ம்ருத்யோ: கபளீக்ருத த்ரிபுவனுபோகஸ்ய
மௌளௌ பதம்
தத்வா போகமஹோததௌ நிரவதி க்ரீடந்தி
தைஸ்தைஸ்ஸுகை: ॥

இவ்வாறு மோக்ஷத்தை அளிக்கிறவளும், சந்திரமண்டலத்தில் எப்பொழுதும் திவ்ய சரீரத்துடன் விளங்குகிறவளுமான தங்களை தினந்தோறும் தியானம் செய்துகொண்டு எவர்கள் ஆராதிக்கிறார்களோ, அவர்கள், மூவுலகிலுமுள்ளவர்களுடைய ஆயுளையும், போகத்தையும், அழிக்கின்ற யமனுடைய தலையில் கால்வைத்து போகமாகிற ஸமுத்ரத்தில் அந்த அந்த ஸௌக்யங்களோடு நீண்டகாலம் விளையாடுகிறார்கள்.

ஸ்ரீ புவனேச்வரியைத் தவிர பக்தர்களுக்கு வேறுகதி இல்லை என்பதை கூறுகிறார்.

त्वं मातापितरौ त्वमेव सुहृदः त्वं भ्रातरस्त्वं सखा
त्वं विद्या त्वमुदारकीर्तिचरितं त्वं भाग्यमत्यद्भुतम् ।
किं भूयः सकलं त्वमीहितमिति ज्ञात्वा कृपाकोमळे
श्रीविश्वेश्वरि संप्रसीद शरणं मातः परं नास्ति मे ॥

த்வம் மாதாபிதரௌ த்வமேவ ஸுஹ்ருதஸ் த்வம் ப்ராதரஸ்த்வம் ஸகா
த்வம் வித்யா த்வமுதாரகீர்த்திசரிதம் த்வம் பாக்கிய மத்யத்புதம் ।
கிம் பூய: ஸகலம் த்வமீஹிதமிதி க்ஞாத்வா க்ருபா கோமளே
ஸ்ரீவிச்வேச்வரி ஸம்ப்ரஸீத சரணம் மாத: பரம் நாஸ்தி மே ॥

ஹே புவனேச்வரி தாங்களே தாய் தந்தையர்கள், தாங்களே ஸ்னேகிதர்கள், தாங்களே சகோதரர்கள், தாங்களே கூட இருப்பவள், தாங்களே கல்வி, தாங்களே கீர்த்தியை பரவச்செய்கிறவள். ஆச்சர்யப்படத்தகுந்த என் பாக்யமும் தாங்களே, அதிகம் கூறுவானேன் என் விருப்பம் யாவும் தாங்களே என்ற என் எண்ணத்தை

அறிந்து, கருணையோடு விளங்குகிறவளும் உலகிற்கு ஈச்வரியுமான ஹே புவனேச்வரி தாங்கள் ப்ரஸாதம் செய்ய வேண்டும். ஓ தாயே என்னை ரக்ஷிக்கிறவள் தங்களைத் தவிர யாரும் இல்லை.

இன்னும் மற்றொரு ச்லோகத்தில் ஸ்ரீ ப்ருத்வீதரர் ஸ்ரீ அம்பாளை பல வழியால் உபாஸிக்கலாம் என்றும், அதனால் அவன் கீர்த்தி மூவுலகிலும் பரவுமென்றும் கூறியுள்ளார்.

ये जानन्ति जपन्ति सन्ततमभिध्यायन्ति गायन्ति वा
तेषामास्यमुपास्यते मृदुपदन्यासैर्विलासैर्गिराम् ।
किञ्च क्रीडति भूर्भुवस्वरभितः श्रीचन्दनस्यन्दिनी
कीर्तिः कीर्तिकरात्रिकैरवसभा सौभाग्यशोभाकरी ॥

யே ஜாநந்தி ஜபந்தி ஸந்தத மபித்யாயந்தி காயந்தி வா
தேஷாமாஸ்யமுபாஸதே ம்ருதுபத த்யாஸைர்
விலாஸைர்கிராம் ।
கிஞ்ச க்ரீடதி பூர்புவஸ்வரபித: ஸ்ரீசந்தனஸ்யந்தினீ
கீர்த்தி: கார்த்திக ராத்ரி கைரவஸபா ஸௌபாக்ய
சோபாகரீ ॥

ஹே புவனேச்வரி எவர்கள் தங்களை அறிகிறார்களோ, தங்கள் மந்திரத்தை எவர்கள் ஜபிக்கிறார்களோ. எவர்கள் தங்கள் ஸ்வரூபத்தை எப்பொழுதும் தியானம் செய்கிறார்களோ தங்கள் ஸ்தோத்திரத்தை கானம் செய்கிறார்களோ அவர்களுடைய வாக்கிலிருந்து அழகியதும், ம்ருதுவானதுமான சொற்கள் வரும்படி ஸ்ரீ அம்பாள் செய்கிறாள். மேலும் அம்ருத தாரை போன்றதும் சரத் காலத்திய நிலவு போன்றதுமான இவ்வுபாஸகர்களின் கீர்த்தியானது மூன்று உலகிலும் பரவுகின்றது.

இந்த ஸ்ரீ புவனேச்வரீ மஹா ஸ்தோத்திரத்தை படிப்பதாலேயே எல்லா ஸித்திகளும் ஏற்படுகின்றன. என்பதைக்கூறும் ச்லோகம்,

कोऽप्यचिन्त्यः प्रभावोऽस्य स्तोत्रस्य प्रत्ययावहः ।
श्रीशम्भोराज्ञया सर्वाः सिद्धयोऽस्मिन्प्रतिष्ठिताः ॥

கோऽப்யசிந்த்ய: ப்ரபாவோऽஸ்ய ஸ்தோத்ரஸ்ய ப்ரத்யயாவஹ:

ஸ்ரீசம்போ ராக்ஞயா ஸர்வா: ஸித்தயோऽஸ்மின் ப்ரதிஷ்டிதா: ॥

மனதிற்கெட்டாத மஹிமைவாய்ந்த இந்த ஸ்தோத்திரத்தை படிப்பதால் ஸ்ரீ அம்பாளிடத்தில் மிகுந்த நம்பிக்கை ஏற்படுகிறது. (ஏனெனில் மந்திரங்கள் நிறைந்த இந்த ஸ்தோத்திரத்தாலேயே எல்லா விருப்பங்களும் கிடைக்கிறது எனக் கருத்து) ஸ்ரீ பரமேச்வரனுடைய கட்டளையின்பேரில் இந்த ஸ்துதியை படிப்பதாலேயே எல்லா சித்திகளும் நிலைபெற்றிருக்கின்றன.

ஸ்ரீ புவனேச்வரீ மந்திரத்தை நிறைய ஜபம் செய்து புரச்சரணை செய்ய விருப்பமுள்ள உபாஸகர்களின் நியமத்தைக் கூறுகிறார்.

भूमौ शय्या वचसि नियमः कामिनीभ्यो निवृत्तिः
प्रातर्जातीविटपसमिधा दन्तजिह्वाविशुद्धिः ।
पत्रावल्यां मधुरमशनं ब्रह्मवृक्षस्य पुष्पैः
पूजाहोमौ कुसुमवसनालेपनान्युज्ज्वलानि ॥

பூமேள சய்யா வசஸி நியம: காமினீப்யோ நிவ்ருத்தி:
ப்ராதர்ஜாதீ விடபஸமிதா தந்தஜிஹ்வாவிசுத்தி: |
பத்ராவல்யாம் மதுர மசனம் ப்ரும்மவ்ருக்ஷஸ்ய புஷ்பை:
பூஜாஹோமேள குஸுமவஸநா லேபனுங்யுஜ்வலானி ||

பூமியில் படுப்பது, ஸத்யம் பேசுவது, வீண்பேச்சு பேசாமல் இருப்பது முதலிய வாக்நியமம், ஸ்த்ரீபோக மில்லாதிருத்தல் காலையில் பால்மரத்தின் குச்சியால் பல் வாக்கு சுத்திசெய்வது. இலையில் இனிமையான (உப்பில்லாத) ஆகாரம் உட்கொள்வது ப்ரம்ம (பலாச) வ்ருக்ஷத்தின் புஷ்பங்களால் பூஜை, ஹோமம் செய்வது, (பலாச வ்ருக்ஷத்தையே ப்ரும்ம வ்ருக்ஷம் என வேதம் கூறுகிறது, முன்பு ஒரு ஸமயம் தேவர்கள் காயத்ரீயைப்பற்றி பேசுவதற்காக பூமிக்குவந்து இந்த பலாச வ்ருக்ஷத்தடியில் அமர்ந்து காயத்ரியின் பொருளான ப்ரும்ம ஸ்வரூபத்தைப் பற்றிக் கூறினுர்கள். காயத்ரீ மந்திரத்தில் மூன்று பாதங்கள் உள்ளன. இதன் பொருளை பலாச (புரச) மரமும் கேட்டு உணர்ந்ததால் அதன் இலைகளும் அதிலிருந்து மூன்று மூன்ருக ஆயின, அந்த மரத்திற்கு ப்ரம்ம வ்ருக்ஷம் எனப்பெயரும் வந்தது. இதை வேதமும் देवायै ब्रह्मन्नवदन्त — என்று ஆரம்பித்து तस्मात् त्रीणि त्रीणि पर्णस्य पलाशानि || முடியக் கூறியுள்ளது. இதிலிருந்து மரங்களுக்கும் அறிவு உண்டு என்பதை வேதம் கூறியது வெளியாகிறது) ஸ்ரீ அம்பாளுக்கு மலர்ந்த வாஸனை யுள்ள புஷ்பங்கள் நல்ல வஸ்திரங்கள் சந்தனம் முதலிய வாஸனை திரவியங்கள் இவைகளை உபயோகப்படுத்தல். என்ற இவைகளே நியமங்கள் எனக் கூறியுள்ளார்.

மேலும் மந்திரத்தின் உபாஸனையின் கிரமங்களையும் அதன் மஹிமையையும் கூறுமிடத்தில் "பிங்களமதம்" என்னும் கிரந்தத்தில்:—

नाध्यातो नार्चितो मन्त्रः सुशुद्धोऽपि प्रसीदति ।
नाजप्तः सिद्धिदानेच्छुः नाहुतः फलदो भवेत् ॥
पूजां ध्यानं जपं होमं तस्मात्कर्म चतुष्टयम् ।
प्रत्यहं साधकः कुर्यात् स्वयं चेत्सिद्धिमिच्छति ॥
जपश्रान्तः शिवं ध्यायेत् ध्यानश्रान्तः पुनर्जपेत् ।
जपध्यानसमायुक्तः शीघ्रं सिद्ध्यति मन्त्रवित् ॥

நாத்யாதோ நார்ச்சிதோ மந்த்ர: ஸுசுத்தோऽபி ப்ரஸீததி ।
நாஜப்த : ஸித்தி தானேச்சு : நாஹுத : பலதோ பவேத் ॥
பூஜாம் த்யானம் ஜபம் ஹோமம் தஸ்மாத்கர்மசதுஷ்டயம் ।
ப்ரத்யஹம் ஸாதக: குர்யாத் ஸ்வயம் சேத்ஸித்திமிச்சதி ॥
ஜபச்ராந்த சிவம் த்யாயேத் த்யானச்ராந்த : புனர் ஜபேத் ।
ஜபத்யான ஸமாயுக்த : சீக்ரம் ஸித்யதி மந்திரவித் ॥

மிக பரிசுத்தமான மந்திரம்கூட அதன் பொருளாகிய தேவதையை தியானம் செய்யாமலும் பூஜை செய்யாமலும் பயனை அளிக்காது. அந்த மந்திரம் ஜபம் செய்யாமல் ஸித்தியை கொடுக்க விருப்பமுள்ளதாக ஆகாது. ஹோமம் செய்யாமல் பலனை அளிக்காது. தான் மந்திர சக்தியை அடைய விரும்பும் உபாஸகன் பூஜை, தியானம், ஜபம், ஹோமம் இந்த நான்கையும் தினந்தோறும் செய்ய வேண்டும். ஜபம் செய்து சோர்வை அடைந்தவன் சிவனை தியானம் செய்யவேண்டும். தியானத்தை செய்து சோர்வையுற்றவன் மீண்டும் மந்திரத்தை ஜபம் செய்ய வேண்டும். ஜபம், தியானம் இவைகளோடு கூடிய மந்திர உபாஸகன் சிக்கிரம் மந்திரஸித்தியை அடைவான்.

ஸ்ரீ புவனேச்வரி மந்திரத்தை ஜபிப்பவன் பல நன்மைகளை அடைவான் என்பதை மந்திர சாஸ்திரம் கூறுகிறது.

सिद्धः प्रसिद्धः तेजस्वी त्यागी योगी जितेन्द्रियः ।
सर्वज्ञः सुभगः श्रीमान् निराधिः प्रियदर्शनः ॥
चौरादिश्याळवेताळ गुह्यकव्यन्तरान्तरैः ।
न भयं जायते तस्य सिद्धमन्त्रस्य देहिनः ॥
ग्रामे वा नगरे वापि सभायां राजसन्निधौ ।
प्रसिद्धः पूज्यते सद्भिः लभते वाञ्छितं हितम् ॥

ஸித்த: ப்ரஸித்த: தேஜஸ்வீ த்யாகீ யோகீ ஜிதேந்த்ரிய: ।
ஸர்வக்ஞ: ஸுபக: ஸ்ரீமான் நிராதி: ப்ரிய தர்சன: ॥
சௌராதி ச்யாள வேதாள குஹ்யகவ்யந்தராந்தரை: ।
ந பயம் ஜாயதே தஸ்ய ஸித்தமந்த்ரஸ்ய தேஹின: ॥

க்ராமே வா நகரே வாபி ஸபாயாம் ராஜஸந்நிதௌ ।
ப்ரஸித்த: பூஜ்யதே ஸத்பி: லபதே வாஞ்சிதம் ஹிதம் ॥

ஸ்ரீ அம்பாளின் மந்திரத்தை ஜபிப்பவன் ஸித்த புருஷனுகவும், உலகில் பிரசித்தி பெற்றவனுகவும், தேஜஸ்வியாகவும், தியாகம் செய்கிறவனுகவும், யோக சக்திவாய்ந்தவனுகவும். இந்த்ரிய ஜயமுள்ளவனுகவும். யாவற்றையும் அறிந்தவனுகவும், நல்ல பாக்யமுள்ளவனுகவும், ஸ்ரீ ஸம்ருத்தியையடைந்தவனுகவும், வியாதியற்றவனுகவும், ப்ரியமாய் காணப்படுகிறவனுயும் விளங்குவார். திருடன் முதலானவர்களாலும் பூதப்ரேதபிசாசம் முதலியவைகளாலும் பயமானது இம்மந்திரத்தைஜபித்து ஸித்தி செய்துகொண்ட மனிதனுக்கு ஏற்படாது. மேலும் இந்த மந்திரத்தை ஸித்தி செய்தவன் கிராமத்திலும், பட்டணத்திலும், வித்வான்களின் ஸபையிலும், ராஜ ஸந்நிதியிலும், பெருமை வாய்ந்தவனுகவும், ஸாதுக்களால் பூஜிக்கப்படுகிறவனுகவும் ஆகி கோரிய நன்மையை அடைகிருன்.

சுமார் இரண்டாயிரம் வருஷத்து முன்பு அவதாரம் செய்த ஸ்ரீ ஆதி சங்கரபகவத்பாதாளும் பல மந்திரங்களின் பெருமையை ப்ரபஞ்சஸாரம், என்னும் கிரந்தத்தில் கூறியுள்ளார். முக்கியமாக ஸ்ரீ புவனேச்வரி தேவியின் மந்திரம், யந்திரம், பூஜை, ஹோமம் முதலியவற்றை பல ச்லோகங்களால் கூறியிருக்கிறார். அவைகளில் சில ச்லோகங்களை இங்கு காண்போம்.

अथाभिवक्ष्ये सकलप्रपञ्च मूलात्मिकायाः प्रकृतेर्यथावत् ।
मन्त्रं तु सांगं सहुताभिषेक जपार्चनाद्यं सकलार्थसिद्ध्यै ॥
दुरितापहोऽर्थसुखधर्ममोक्षदः भजतामशेषजनरञ्जनक्षमः ॥

அதாபிவக்ஷ்யே ஸகலப்ரபஞ்ச-
மூலாத்மிகாயா: ப்ரக்ருதேர்யதாவத் ।
மந்த்ரம் து ஸாங்கம் ஸஹுதாபிஷேக-
ஜபார்ச்சனாத்யம் ஸகலார்த்தஸித்யை ॥
துரிதாபஹோऽர்த்தஸுகதர்மமோக்ஷத:
பஜதாமசேஷ ஜனரஞ்ஜன க்ஷம: ॥

இதற்கு மேல் எல்லா ப்ரபஞ்சங்களுக்கும் மூலகாரணமான ஸ்ரீ புவனேச்வரீ தேவியின் மந்திரத்தை எல்லா புருஷார்த்தங்களும் ஸித்திப்பதின் பொருட்டு எல்லா அங்கத்துடனும் ஹோமம், அபிஷேகம், ஜபம், அர்ச்சனை முதலியதோடும் கூறப்போகிறேன். மேலும் பஜிப்பவர்களுடைய பாபங்களை போக்கக்கூடியது. அர்த்தம், காமம், தர்மம், மோக்ஷம் இவைகளை அளிக்கக்கூடியது. எல்லா ஜனங்களையும் ரஞ்சிக்கச்செய்ய வல்லமை வாய்ந்தது.

மேலும்,

अर्काभस्तेजसाऽसौ भवति नलिनजा संततं किंकरी स्यात्
रोगा नश्यन्ति दृष्ट्वा तमथ च धनधान्याकुलं तत्समीपम् ।
देवा नित्यं नमोऽस्मै विदधति फणिनो नैव दंशन्ति पुत्राः
संपन्नाः स्युः सपुत्रास्तनुविपदि परं धाम विष्णोः स भूयात् ॥

அர்காபஸ்தேஜஸாऽஸௌ பவதி நளினஜா ஸந்ததம்
கிங்கரீ ஸ்யாத்
ரோகா நச்யந்தி த்ருஷ்ட்வா தமத ச தனதான்யாகுலம்
தத்ஸமீபம்
தேவா நித்யம் நமோऽஸ்மை விதததி பணினோ
நைவ தம்சந்தி புத்ரா:
ஸம்பந்நா : ஸ்யு : ஸபுத்ராஸ்தநுவிபதி பரம் தாம
விஷ்ணோஸ்ஸ பூயாத் ॥

ஸ்ரீ புவனேச்வரீ அம்பாளின் மந்திரத்தை உபாஸிப்பவன் தேஜஸ்ஸால் சூரியன் போன்றவனாக ஆகிறான். ஸ்ரீ மஹாலக்ஷ்மி கோருவதைச் செய்கிறவளாகிறாள். அவனைக்கண்டமாத்திரத்திலேயே ரோகங்கள் நாசமடைகின்றன. அவனுடைய சமீபத்தில் பொருள், தான்யம் இவைகளின் குவியல்கள் இருக்கும். இவனை தேவர்கள் தினந்தோறும் நமஸ்கரிக்கிறார்கள். ஸர்பங்கள் தீண்டுவதில்லை. இவருடைய குமாரர்கள் தன் புத்திரர்களுடனும் எல்லா ஸம்பத்துகளுடனும் கூடினவர்களாய் விளங்குகிறார்கள். கடைசி காலத்தில் ஸ்ரீ விஷ்ணுவின் சிறந்த ஸ்தானத்தையும் அடைவான்.

மேலும்

संक्षेपतो निगदितो विधिरर्चनायाः
शक्तेरमुं भजतु संसृतिमोचनाय ।
कान्त्यै श्रियै च यशसे जनरञ्जनाय
सिद्ध्यै प्रसिद्धमहसोऽस्य परस्य धाम्नः ॥

ஸம்க்ஷேபதோ நிகதிதோ விதிரர்சனுயா:
சக்தேரமும் பஜது ஸம்ஸ்ருதிமோசனுய ।
காந்த்யை ச்ரியை ச யசஸே ஜனரஞ்ஜனுய
ஸித்யை ப்ரஸித்தமஹஸோऽஸ்ய பரஸ்ய தாம்ன: ॥

ஸ்ரீ அம்பாளுடைய பூஜாவிதானமானது சுருக்கமாகக் கூறப்பட்டது. ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுபடுவதற்கும் நல்ல காந்தியை அடைவதற்கும், ஐச்வர்யத்தை அடைவதற்கும், யசஸ்ஸை பெறுவதற்கும், ஜனங்களை ரஞ்சிக்கச் செய்வதற்கும் ப்ரசித்தமான மஹிமை வாய்ந்த உத்க்ருஷ்டமான ஸ்தானத்தை (மோக்ஷத்தை) அடைவதற்கும் இந்த ஸ்ரீ புவனேச்வரீ மந்திரத்தை உபாஸிக்கவேண்டும்.

एभिर्विधानैर्भुवनेश्वरीं तां
समर्चयित्वाऽथ जपंश्च मन्त्री ।
स्तुत्यानयाभिष्टुवतां समग्र-
प्रीत्यै समस्तार्तिविभञ्जिकायाः ॥

ஏபிர்விதானைர் புவனேச்வரீம் தாம்
ஸமர்சயித்வாऽத ஜபம்ச்ச மந்த்ரீ ।
ஸ்துத்யாநயாபிஷ்டுவதாம் ஸமக்ர-
ப்ரீத்யை ஸமஸ்தார்த்தி விபஞ்ஜிகாயா: ॥

ஸ்ரீ புவனேச்வரீ தேவியை உபாஸிப்பவன் இந்த கல்பத்தில் சொல்லிய முறைகளால் அந்த ஸ்ரீ புவனேச்வரியை, அர்சித்தும், ஸ்ரீ புவனேச்வரீ மந்திரத்தை ஜபம் செய்துகொண்டும், எல்லா ஆபத்துக்களையும் நாசம் செய்கின்ற ஸ்ரீ அம்பாளின் பரிபூர்ண திருப்தியை அடைவதின் பொருட்டு மேல் சொல்லப்போகும் ஸ்தோத்திரத்தால் ஸ்துதிக்கவேண்டும்.

ஸ்ரீ ஆசார்யாளே தான் ஸ்தோத்திரம் செய்யும் வாயிலாக நாம் ஸ்தோத்திரம் செய்யவேண்டிய முறையைக் கூறுகிறார்.

प्रसीद प्रपञ्चस्वरूपे प्रधाने
प्रकृत्यात्मिके प्राणिनां प्राणसंज्ञे ।
प्रणोतुं प्रभो प्रारभे प्राञ्जलिस्त्वां
प्रकृत्या प्रतर्के प्रकामप्रवृत्ते ॥
समुद्यद्दिवाकृत्सहस्रप्रभासा
सदासन्तताशेषविश्वावकाशे ।
लसन्मौलिबद्धेन्दुरेखे सपाशां-
कुशाभीष्टात्तहस्ते नमस्ते ॥

ப்ரஸீத ப்ரபஞ்சஸ்வருபே ப்ரதானே
ப்ரக்ருத்யாத்மிகே ப்ராணிநாம் ப்ராணஸம்க்ஞே ।
ப்ரணோதும் ப்ரபோ ப்ராரபே ப்ராஞ்ஜலிஸ்த்வாம்
ப்ரக்ருத்யா ப்ரதர்க்கே ப்ரகாமப்ரவ்ருத்தே ॥
ஸமுத்யத்திவாக்ருத்ஸஹஸ்ர ப்ரபாஸா
ஸதாஸந்ததாசேஷ விச்வாவகாசே ।
லஸன் மௌளிபத்தேந்துரேகே ஸபாசாங்-
குசாபீஷ்டாத்த ஹஸ்தே நமஸ்தே ॥

ப்ரபஞ்ச உருவாக இருப்பவளே, உலகிற்குக்காரணமாய் இருப்பவளே, மாயாசக்தியின் ரூபமாய் இருப்பவளே, ப்ராணிகளின் உயிராய் இருப்பவளே, மாயா கார்யமான ப்ரபஞ்சத்தால் ஊஹிக்கத்தகுந்தவளே, தன் இஷ்டப்படி கார்யங்களை செய்பவளே, ப்ரபுவான ஓ புவனேச்வரி தாங்கள் ப்ரஸன்னமாக வேண்டும். ஏ தாயே, அஞ்சலி செய்துகொண்டு தங்களை ஸ்துதி செய்யத் தொடங்குகிறேன்.

நன்கு உதயமாகின்ற ஆயிரம் சூரியர்களின் காந்தியால் எப்பொழுதும், எல்லா உலகங்களிலும், இடைவெளிகளிலும், நன்கு பரவி இருப்பவளே, ப்ரகாசிக்கின்ற தலையில் சந்திரகலையை தரித்தவளே, பாசம், அங்குசம், என்ற ஆயுதங்கள் அபய, வரத என்ற முத்ரைகள் இவைகளை கைகளில் உடையவளே இப்படிப்பட்ட ஓ புவனேச்வரி தங்களுக்கு நமஸ்காரம்.

இந்த ச்லோகத்தில் ஸ்ரீ ஆதிசங்கரர் தனது செய்கை எல்லாம் ஸ்ரீ அம்பாளை உபாஸிப்பதாக ஆக வேண்டுமென வேண்டுவதின் மூலம் பக்தர்களுக்கு அம்மாதிரியான எண்ணம் வருவதற்காக கூறுகிறார்.

मनोवृत्तिरस्तु स्मृतिस्ते समस्ता
तथा वाक्प्रवृत्तिः स्तुतिः स्यान्महेशि ।
शरीरप्रवृत्तिः प्रणामक्रिया स्यात्
प्रसीद क्षमस्म प्रभो सन्ततं मे ॥

மனோவ்ருத்திரஸ்து ஸ்ம்ருதிஸ்தே ஸமஸ்தா
ததா வாக்ப்ரவ்ருத்தி: ஸ்துதி: ஸ்யான் மஹேசி ।
சரீரப்ரவ்ருத்தி: ப்ரணாம க்ரியா ஸ்யாத்
ப்ரஸீத க்ஷமஸ்வ ப்ரபோ ஸந்ததம் மே ॥

நான் விஷயங்களை எல்லாம் நினைப்பது யாவும் ஓ புவனேச்வரி, தங்களை ஸ்மரிப்பதாகவே ஆகட்டும். ஓ மஹேச்வரி, என் வாக்கிலிருந்துவரும் சொற்கள் யாவும் தங்களைக் குறித்து செய்யும் ஸ்துதியாக ஆகட்டும். என் சரீரத்தால் செய்யப்படும் கார்யம் தங்களுக்குச் செய்யும் நமஸ்காரமாக ஆகட்டும் ஓ ப்ரபுவே, அருள் புரியவேண்டும். எப்பொழுதும் நான் செய்யும் குற்றங்களை பொறுத்தருளவேண்டும்.

மேலும் ஸ்ரீ ஆசார்யாள் ஹோமங்களால் ஆராதிப்பதையும் அதன் பலன்களையும் கூறுகிறார்.

க்ஷுத்ரக்ரஹம் (நீச தேவதைகள்) சத்ருக்கள், விஷமஜ்வரம், பூதங்கள், யக்ஷர்கள், ராக்ஷஸர்கள் இவர்களால் மிகுந்த கஷ்டம் ஏற்பட்டபொழுது அந்த அந்த கஷ்டத்திற்கு தக்கவாறு ஸ்ரீ அம்பாளின் மந்திரத்தை ஜபிக்கும் உபாஸகன், நூறு அல்லது இருநூறு அல்லது முன்னூறு அல்லது நானூறு ஆவர்த்திகள் ஹோமம் செய்யவேண்டும். இப்பொருளைக் கூறும் ச்லோகம்,

एकद्विकत्रिकचतुष्कशताभिवृत्त्या
तांस्तान्समीक्ष्य विकृतिं प्रजुहोतु मन्त्री ।
क्षुद्रग्रहारिविषमज्वर भूतयक्ष-
रक्षः पिशाचजनिते महति प्रकोपे ॥

ஏகத்விகத்ரிக சதுஷ்கசதாபிவ்ருத்யா
தாம்ஸ்தான்ஸமீக்ஷ்ய விக்ருதிம் ப்ரஜுஹோது மந்த்ரீ ।
க்ஷுத்ரக்ரஹாரிவிஷமஜ்வரபூதயக்ஷ-
ரக்ஷ : பிசாசஜனிதே மஹதி ப்ரகோபே ॥

(இதற்குரிய எட்டு திரவியங்கள் அரசு முதலியன என்பது முன்பே கூறப்பட்டது.)

மேலும்,

द्वादशसहस्रमथवा तद्द्विगुणं वा चतुर्गुणं वाथ ।
जुहुयात् क्षुद्रग्रहरिपु विषमज्वरभूतसंभवे कोपे ॥

த்வாதசஸஹஸ்ரமதவா தத்விகுணம் வா சதுர்குணம் வாத ।
ஜுஹுயாத் க்ஷுத்ரக்ரஹரிபு விஷமஜ்வர பூதஸம்பவே கோபே ॥

கஷ்டங்கள் அதிகமாக இருந்தால் பன்னிரண்டா யிரமோ, (12,000) இருபத்து நான்காயிரமோ, (24000) நாற்பத்தெட்டாயிரமோ, (48,000) ஹோமம் செய்ய வேண்டும். அக் கஷ்டங்கள் உடனே நீங்கும்.

மந்திரஜபம் செய்கிறவர்களுக்கு கஷ்டங்கள் வருவ தற்குக் காரணத்தையும், அவைகளை நீக்கிக்கொள்ள சுலபமான உபாயத்தையும் கூறுகிறார்.

अयथाप्रतिपत्तिमन्त्रकाणां
प्रजपात् स्यादिह विस्मृतिर्नराणाम् ।
शमयेदचिरात्सहस्रवृत्त्या
मतिमान् वस्तुभिरेव जुह्वन् ॥

அயதா ப்ரதிபத்திமந்த்ரகாணும்
ப்ரஜபாத் ஸ்யாதிஹ விஸ்ம்ருதிர் நராணும் ।
சமயேதசிராத்ஸஹஸ்ரவ்ருத்யா
மதிமான் வஸ்துபிரேவ ஜுஹ்வன் ॥

மந்திரங்களின் அக்ஷரங்களை தவறி ஜபிப்பதாலும், அவநம்பிக்கையுடன் ஜபிப்பதாலும் மனிதர்களுக்கு மறதி ஏற்படும். அபஸ்மாரமென்றும் சிலர் சொல்லுகிறார்கள். இது நீங்குவதற்காக புத்திமானான உபாஸகன் இந்த எட்டு திரவியங்களால் ஆயிரம் ஆவர்த்தி ஹோமம் செய்யவேண்டும்.

இதற்கடுத்த ச்லோகத்தால், இந்த எட்டு திரவியங் களால் இரண்டாயிரம் ஆவர்த்தி ஹோமம் செய்வதால் மறதி, அபஸ்மாரம், இவைகள் நீங்குவதுடன் சாபத்தால் ஏற்பட்ட தோஷங்களும் உடனேயே விலகிவிடும் என கூறினார்.

மேலும்,

मधुरत्रयावसिक्तैः एतैर्लक्षं जुहोति यो मन्त्री ।
तस्य सुराधिपविभवः महद्‌ध्या तृणलवायते न चिरात् ॥
लक्षं तदर्धकं वा मधुरत्रयसंयुतैर्हुनेदेतैः ।
अब्दत्रयादथार्वाक् त्रिभुवनमखिलं वशे कुरुते ॥

மதுரத்ரயாவஸிக்தை: ஏதைர் லக்ஷம் ஜுஹோதி யோ மந்த்ரீ।
தஸ்ய ஸுராதிபவிபவ: மஹத்ருத்யா த்ருணலவாயதே
ந சிராத் ॥

லக்ஷம் ததர்த்தகம் வா மதுரத்ரய ஸம்யுதைர்ஹுநே
தேதை:।
அப்தத்ரயாததார்வாக் த்ரிபுவநமகிலம் வசே குருதே ॥

த்ரிமதுவினுல் நனைக்கப்பட்ட இந்த எட்டு திரவியங்களால் லக்ஷம் ஆவர்த்தி ஹோமம் செய்தால் நிரம்ப பொருள் கிடைக்கும். இதன் ஸம்ருத்தியால் இந்திரனுடைய ஐச்வர்யமும் துரும்புபோல் சிறியதாகத் தோன்றும்.

இவ்விதம் த்ரிமதுரங்களில் தோய்க்கப்பட்ட எட்டு திரவியங்களால் லக்ஷம் ஆவர்த்தியோ அல்லது ஐம்பதாயிரம் ஆவர்த்தியோ, ஹோமம் செய்தால், மூன்று வருஷத்திலோ அதற்கு முன்போ மூன்று உலகத்தையும் வசமாக்கிக்கொள்வான். இங்கு மூன்று வருஷமும் ஹோமம் செய்ய வேண்டுமென்றும் பொருள் கொள்ளலாம்.

वश्यादीन्यपि कर्माणि अभिकांक्षन्नेभिरेव सद्रव्यैः ।
जुहुयात् कार्ये गुरुता लाघवमभीक्ष्य परिमाणम् ॥

வச்யா தீந்யபி கர்மாணி
அபிகாங்க்ஷந்நேபிரேவ ஸத்த்ரவ்யை:।
ஜுஹுயாத்கார்யே குருதா
லாகவமபிவீக்ஷ்ய பரிமாணம் ॥

வச்யம் முதலிய கார்யங்களை விரும்புகிறவன் இந்த சுத்தமான திரவியங்களால் செய்யவேண்டிய கார்யத்தில் பெரியதா, சிறியதா என்பதை நன்கு கவனித்து தகுந்த அளவு ஹோமம் செய்யவேண்டும்.

மேலும் இவ்விதம்,

लक्षं तिलानां जुहुयाद्यवानां
शान्त्यै श्रियेऽथो नलिनैश्च तावत् ।
दौग्ध्येन पुष्ट्यै यशसे घृतेन
वश्याय जातीकुसुमैश्च लोणैः ॥

லக்ஷம் திலானும் ஜுஹுயாத்யவானும்
சாந்த்யை ச்ரியேऽதோ நளிநைச்ச தாவத்।
தௌக்த்யேந புஷ்ட்யை யசஸே க்ருதேன
வச்யாய ஜாதீகுஸுமைச்ச லோணை: ॥

எள்ளு, யவை, இவைகளைக்கொண்டு ரோகம் முதலியவை நீங்குவதற்கு லக்ஷம் ஹோமமும், ஐச்வர்யத்தை அடைவதற்கு தாமரைப்பூக்களால் அதே லக்ஷம் ஹோமமும், புஷ்டியை அடைய தயிரால் லக்ஷம் ஹோமமும், யசஸ்ஸை பெறுவதற்கு நெய்யால் அதே ஆவர்த்தி ஹோமமும், வச்யத்தை விரும்புகிறவன் ஜாதிபுஷ்பங்களாலும், லவணத்தாலும் ஹோமம் செய்யவேண்டும்.

ஸ்ரீ புவனேச்வரீ மந்திரத்தை ஜபிப்பவன் தான் கோரிய பொருள்களை அடைவதற்கு உரிய ஹோமங்களை சாரதா திலகம் என்னும் கிரந்தத்தில் கூறுகிறார்.

जपेन्मन्त्रान् भजेद्देवान् यजेदग्निमनन्यधीः ।
द्रव्यैश्च जुहुयादग्नौ मन्त्रवित्तन्त्रचोदितैः ॥

ஜபேன் மந்திரான் பஜேத் தேவான் யஜேதக்னிமநன்யதீ:।
த்ரவ்யைச்ச ஜுஹுயாதக்நௌ மந்திரவித்தந்த்ர
சோதிதை:॥

ஸ்ரீ புவனேச்வரீ உபாஸகன், ஒருமைப்பட்ட மனதுடன், மந்திரங்களை ஜபம் செய்யவேண்டும், தேவர்களை பஜிக்கவேண்டும், அக்னியை யஜிக்கவேண்டும், தந்திர சாஸ்திரத்தில் கூறப்பட்ட திரவியங்களால் அக்னியில் ஹோமம் செய்யவேண்டும்.

अश्वत्थोदुम्बरप्लक्ष न्यग्रोधसमिधस्तिलाः ।
सिद्धार्थपायसाज्यानि द्रव्याण्यष्टौ विदुर्बुधाः ॥

அச்வத்தோதும்பரப்லக்ஷ ந்யக்ரோத ஸமிதஸ்திலா:।
ஸித்தார்தபாயஸாஜ்யாநி த்ரவ்யாண்யஷ்டௌ விதுர்புதா:॥

அரசு, அத்தி, இச்சி, கல்லாலை ஆகிய ஸமித்துக்கள், எள், வெண்கடுகு, பாயசம், ஆஜ்யம் இவைகளையே, அஷ்டத்ரவ்யங்கள் என வித்வான்கள் கூறுகிறார்கள்.

अमीभिर्जुहुयाल्लक्षं तदर्धं वा समाहितः ।
सर्वान् कामानवाप्नोति परां सिद्धिं च विन्दति ॥

அமீபிர்ஜுஹுயால்லக்ஷம் ததர்தம் வா ஸமாஹித:।
ஸர்வான் காமாநவாப்னோதி பராம் ஸித்திஞ்ச விந்ததி॥

ஒருமைப்பட்ட மனதுடன், இந்த திரவ்யங்களால், லக்ஷம் ஆவ்ருத்தி ஹோமம், செய்வானேயாகில், எல்லா விருப்பங்களையும் அடைகிறான், சிறந்த சித்தியையும் அடைகிறான்.

एभिरर्कसहस्राणि हुत्वा मन्त्री विनाशयेत् ।
रिपून् क्षुद्रग्रहान् भूतान् ज्वरान् शापांश्च पन्नगान् ।

ஏபிரர்கஸஹஸ்ராணி ஹுத்வா மந்த்ரீ விநாசயேத் ।
ரிபூன் க்ஷுத்ரக்ரஹான் பூதான் ஜ்வரான் சாபாம்ச்ச
பன்னகான் ॥

இவ்விதம் (எட்டுத்ரவ்யங்களாலும்) ஒவ்வொன்றும், 1500 ஆவ்ருத்தி வீதம், ஆக 12 ஆயிரம் ஹோமம் செய்து, சத்ருக்களையும், க்ஷுத்ரக்ரஹங்களையும், பூதங்களையும், ஜ்வரங்களையும், சாபங்களையும், ஸர்பங்களையும் நசிக்க செய்யலாம்.

मन्त्राणामयथावृत्ति प्रतिपत्तिसमुद्भवान् ।
विकारान्नाशयेदाशु होमोऽयं समुदीरितः ॥

மந்த்ராணுமயதாவ்ருத்தி ப்ரதிபத்திஸமுத்பவான் ।
விகாரான் நாசயேதாசு ஹோமோऽயம் ஸமுதீரித: ॥

மந்திரங்களை சரியாக உச்சரிக்காததாலும், பயன் ஏற்படுமா என சந்தேகப்படுவதாலும், ஏற்படும், முறையே (வாதரோகம், குஷ்டரோகம், சித்தப்ரமம் இவ்விதமான) கஷ்டங்களைப் போக்கவே. இந்தஹோமம் கூறப்பட்டது.

एभिस्त्रिमधुरोपेतैः जुहुयाल्लक्षमानतः ।
अचिरादेव स भवेत् साक्षाद्भूमिपुरन्दरः ॥

ஏபிஸ்திரிமதுரோபேதை: ஜுஹுயால்லக்ஷமாந்த: ।
அசிராதேவ ஸ பவேத் ஸாக்ஷாத் பூமி புரந்தர: ॥

முன்பு கூறப்பட்ட ஸமித்துக்களை த்ரிமதுரத்துடன் (நெய், தேன், பால்), பாலுக்கு பதில் சர்க்கரையோ உப யோகிக்கலாம்) சேர்த்து லக்ஷம் ஆவ்ருத்தி ஹோமம் செய்வானேயாகில் சீக்கிரமே அவன் பூமியில் இந்திர ஞகவே விளங்குவான்,

अमीभिः साधको हुत्वा वश्यादीनपि साधयेत् ।
हुत्वा लक्षं तिलैः शुद्धैः मुच्यते सर्वपातकैः ॥

அமீபி: ஸாதகோ ஹுத்வா வச்யாதீநபி ஸாதயேத் ।
ஹுத்வா லக்ஷம் திலை: சுத்தை: முச்யதே
ஸர்வபாதகை: ॥

பயனை விரும்பும் உபாஸகன், இந்த எட்டு த்ரவ்யங்க ளால், ஹோமம்செய்து, வசீகரணம் முதலிய ஸித்திகளை சாதித்துக்கொள்ளலாம். சுத்தமான எள்ளைக்கொண்டு லக்ஷம் ஆவ்ருத்தி ஹோமம் செய்தால், எல்லா பாபங்களி லிருந்தும் விடுபடுகிருன்.

पायसान्नेन जुहुयात् मन्त्री सर्वसमृद्धये ।
पद्मानां लक्षहोमेन महतीं श्रियमाप्नुयात् ॥

பாயஸான்னேன ஜுஹுயாத் மந்த்ரீ ஸர்வ ஸம்ருத்தயே।
பத்மானும் லக்ஷஹோமேந மஹதீம் ச்ரியமாப்நுயாத் ॥

புவனேச்வரீ மந்திர உபாஸகன் எல்லா ஸம்ருத்தி யையும் அடைய, பாயஸான்னத்தால் ஹோமம் செய்ய வேண்டும், லக்ஷம் தாமரை மலர்களால் ஹோமம் செய் வதால், நிறைந்த ஐச்வர்யத்தை அடைவான்.

घृतेन जुहुयाल्लक्षं प्राप्नुयात् कीर्तिमुत्तमाम् ।
जातीकुसुमहोमेन सर्वलोकं वशं नयेत् ॥

க்ருதேன ஜுஹுயால்லக்ஷம் ப்ராப்நுயாத் கீர்திமுத்தமாம்।
ஜாதீகுஸுமஹோமேன ஸர்வலோகம் வசம் நயேத் ॥

இந்த புவனேச்வரி மந்திரத்தை ஜபித்து நெய்யால் லக்ஷம் ஆவ்ருத்தி ஹோமம் செய்வதால் சிறந்த கீர்த்தியை அடைவான். ஜாதி புஷ்பத்தைக்கொண்டு, ஹோமம் செய்வதால் எல்லா உலகத்தையும் தனக்கு ஸ்வாதீன மாக செய்துகொள்ளலாம்.

पञ्चविंशतिसंजप्तैः जलैः स्नानं दिने दिने ।

பஞ்சவிம்சதி ஸஞ்ஜப்தை : ஜலை : ஸ்நானம் தினே தினே।

ஸ்ரீ புவனேச்வரி மந்திரத்தைக்கொண்டு இருபத் தைந்து ஆவர்த்தி ஜபித்த ஜலத்தால் தினந்தோறும் ஸ்நானம் செய்யவேண்டும்.

आत्मानमभिषिञ्चेद्यः सर्वसौभाग्यवान् भवेत् ।

ஆத்மானமபிஷிஞ்சேத்ய : ஸர்வஸௌபாக்கியவான் பவேத்।

இவ்விதம் ஜபித்து தன்னை யார் அபிஷேகம் செய்து கொள்வானோ, அவன் எல்லா ஸௌபாக்யங்கள் வாய்ந்த வனாக ஆவான்.

अनुदिनमनुलिप्तेन किंचित्समग्रात्
तिलकमपि विदध्यादुत्तमाङ्गे क्षिपेच्च ।
अनुततदुरितापस्मारभूतापमृत्यु-
ग्रहविषरहितः स्यात्प्रीयते च प्रजाभिः ॥

அநுதினமனுலிம்பேத்தேன கிஞ்சித் ஸமத்யாத்

திலகமபி விதத்யாதுத்தமாங்கே க்ஷிபேச்ச ।

அநுதத துரிதாபஸ்மாரபூதாபம்ருத்யு-

க்ரஹவிஷரஹித: ஸ்யாத் ப்ரீயதே சப்ரஜாபி: ॥

இவ்விதம் பல திரவியங்களால் ஹோமம் செய்த பஸ்மாவை தரித்துக்கொள்ளவும், கொஞ்சம் வாக்கில் போட்டுக்கொள்ளவும், நெற்றியில் திலமாக இட்டுக்கொள்வது, தலையில் கொஞ்சம் போட்டுக்கொள்வது, இவைகள் நீண்ட காலமாக ஏற்பட்ட பாபங்கள், அபஸ்மாரம், பூதம், அபம்ருத்யு, துஷ்டக்ரங்கள், விஷம், இந்த பாதைகளை போக்கும். இவ்விதம் திலகம் தரித்துக்கொண்டவனைப் பார்த்து ஜனங்கள் சந்தோஷப்படுவார்கள்.

குங்குமத்தை திலகமாக தரித்துக்கொள்வதின் பயனைக் கூறுகிறார்,

कर्पूरागरुसंयुक्तं कुङ्कुमं साधुसाधितम् ।

गृहीत्वा तिलकं कुर्यात् राजवश्यमनुत्तमम् ॥

கர்பூராகருஸம்யுக்தம் குங்குமம் ஸாது ஸாதிதம் ।

க்ருஹீத்வா திலகம் குர்யாத் ராஜவச்யமநுத்தமம் ॥

கர்பூரம், அகிழ் இவைகளுடன் சேர்த்து நன்கு செய்யப்பட்ட குங்குமத்தை எடுத்து நெற்றியில் திலகமாக தரிக்கவேண்டும். அச்சிறந்த திலகமே ராஜாக்களை வசீகரம் செய்வதாகும், ஸுகப்ரஸவத்தை கோருகிறவர்கள் ஸ்ரீ புவனேச்வரீ தேவியை வழிபடும் முறையை உபதேசிக்கிறார்.

लिखितां भस्मना मायां ललाट्यां फलकादिषु ।

तत्काले दर्शयेद्यन्त्रं सुखं सूयेत गर्भिणी ॥

லிகிதாம் பஸ்மனு மாயாம் ஸஸாத்யாம் பலகாதிஷு |
தத்காலே தர்சயேத் யந்த்ரம் ஸுகம் ஸூயேத கர்பிணீ ||

பலகை முதலியவைகளில் ஸ்ரீ புவனேச்வரீ பீஜத்தை யும், ப்ரஸவிக்கவிருக்கும் ஸ்த்ரீயின் பெயரையும் எழுதி, சுகப்ரஸவமாக வேண்டும் என்றும் எழுதி அந்த கர்பிணி ஸ்த்ரீயை பார்க்கும்படி செய்தால் உடன் ஸுகப்ரஸவ மாகும்.

மேலும்

पञ्चविंशतिसंजप्तं जलं प्रातः पिबेन्नरः ।
अवाप्य महतीं प्रज्ञां कवीनामग्रणीर्भवेत् ॥

பஞ்சவிம்சதி ஸஞ்ஜப்தம் ஜலம் ப்ராத: பிபேந்நர: |
அவாப்ய மஹதீம் ப்ரக்ஞாம் கவீநாமக்ரணீர்பவேத் ||

ஸ்ரீபுவனேச்வரீ மந்திரத்தால் இருபத்தைந்துதடவை ஜபித்த தீர்த்தத்தை சாப்பிடும் மனிதன் சிறந்த ப்ரக் ஞையை அடைந்து கவிகளுக்குள் முதல்வனுவான்.

இது மாதிரி இன்னும் பல விருப்பங்களுக்குத்தகுந்த வாறு ஹோமம் முதலியவைகள் கூறப்பட்டுள்ளன. ஸ்ரீபுவனேச்வரீ தேவியை உபாஸித்தாலே உலகில் எல்லா வற்றையும் அடையலாம் என்பதும், எல்லா கஷ்டங் களும் விலகுவதற்கும் இதுவே சிறந்தது என்றும் தெளி வாகிறது. ஆயினும் இவ்விதமான ஸ்ரீபுவனேச்வரி மந்தி ரம் முதலியவற்றை சிறந்த குருவை நமஸ்கரித்து அவர் கள் மூலம் உபதேசம் பெறவேண்டும். இம்மந்திரத்தை தினந்தோறும் விடாது சிரத்தை, நம்பிக்கையுடனும் ஜபித்து வரவேண்டும், மந்திரம், அதற்குரிய தேவதை உபதேசம் செய்த குரு, இவர்களை ஒரே ஸமமாக பாவிக்க வேண்டும், குருவை அவமதிப்பதால் ஆயுள் குறைவு ஏற்படும் மந்திரத்தை விடுவதால் ஏழ்மை வரும் என்று, கூறப்பட்டுள்ளது,

गुरोरवज्ञया मृत्युः मन्त्रत्यागाद्दरिद्रता ।

குரோரவக்ஞயா ம்ருத்யு: மந்த்ரத்யாகாத்தரித்ரதா ||

ஆகவே மந்திரம், தேவதை, குரு இவர்களை பக்தியுடன் பூஜித்து வருவதே நாம் கோரியவைகளை சுலபமாக அடைய ஏதுவாகும்.

இந்த மந்திரம் எனக்கு கிடைத்த வரலாறு

சிருங்ககிரி பீடத்தில் அமர்ந்த ஜகத்குருக்களும், மந்திர மூர்திகளும் ப்ரம்ம நிஷ்டர்களுமான ஸ்ரீநரஸிம்ம பாரதி ஸ்வாமிகளிடம் வேத வித்தான பாலக்காடு விஸ்வநாதகனபாடிகள் என்பவர் மந்திரங்கள் யாவையும் கற்று கும்பகோணத்தில் வஸித்து வந்தார். இவர்கள் நமது பரமாசார்யாளானஸ்ரீ ஜகத்குரு காஞ்சிகாமகோடிபீடாதிபதிகளிடத்தில் அளவு கடந்த பக்தி கொண்டவர்கள். இவர்கள் தனது மந்திர பலத்தால் பரிஹாரங்கள் செய்து வைத்து வந்தார் இவர்கள் ஒரு ஸமயம் என் தமயனாரும் ஸோமயாகம் செய்து நித்யாக்னி ஹோத்திரம் செய்துவந்தவருமான ஸ்ரீவைத்யநாத தீக்ஷிதரிடம் ஸ்ரீபுவனேச்வரீ மஹா மந்திரம் உங்கள் பரம்பரையில் ஜபித்து வரப்படுகிறது என்றும் தங்கள் ஸ்ரீபிதாவிடத்தில் இந்த மந்திரம் இருக்கிறது என்றும் இதை உங்கள் தம்பியை உபதேசம் பெற்று ஜபித்து வரச்சொல்லுங்கள் என்றும் அஞ்ஜனத்தில் பார்த்துக் கூறினர். இதை அறிந்த நான் என் ஸ்ரீ பிதாவை நமஸ்கரித்து பிரார்த்தித்தேன். அவர்களும் நம் குடும்பத்தில் பரம்பரையாய் இந்த மந்திரம் ஜபித்து வரப்படுகிறது என்றும் சொல்லி உபதேசித்தார்கள். அதிலிருந்து இதை ஜபித்து பல க்ஷேமங்களை அடைந்து வருகிறேன். இந்த மந்திரத்தை ப்ரணவ ஸம்புடிதமாக பெரியோர்கள் ஜபிப்பது வழக்கம்.

இம்மந்திரத்தை பிரணவமில்லாமல் ஸ்ரீ ரமண மஹ ரிஷியின் முக்ய சிஷ்யர்களான ஸ்ரீ தண்டபாணி ஸ்வாமி கள் என்ற ஸன்யாஸிகள் அஹோராத்ரம் இடைவிடாது ஜபித்து வந்தார்கள். அவர்களிடம் ஸம்புடிதமாக வல் லவா இம்மந்திரத்தை பெரியோர்கள் ஜபிக்கிறார்கள் எனக் கேட்டேன். வயது முதிர்ந்த அந்த ஸ்வாமிகள் அவ்வாரே ப்ரணவ ஸம்புடிதமாய் இனி ஜெபிக்கிறேன் எனச் சொல்லி பல லக்ஷம் ஆவ்ருத்தி ஒரு வாரத்தில் ஜபித்து விட்டார். உடன் பெங்களூருக்குச் சென்று அங்கிருந்து எனக்கு ஒரு ஆச்சர்யமான ஓர் கடிதம் எழு தியதாவது. ஸ்ரீ அம்பாளுக்கு ஐந்து ஏகர் நிலம் வாங்கி வைக்க வேண்டுமென பெங்களூரில் ஓர் பெரிய ஆபீஸர் வீட்டுக்கு வண்டியில் போய் இறங்கி அப்பங்களாவின் வாசற் கதவைத் தட்டினேன். அந்த ஆபீஸர் கதவைத் திறந்து பார்த்து ஸன்யாஸிக்கு இரவு பன்னிரண்டு மணிக்கு ஒருவன் வீட்டு கதவை தட்டி ஆகவேண்டி யது என்ன? எனக்கோபத்துடன் கேட்டார்.

உனக்கு சௌகர்யமில்லாவிடில் உன் வீட்டு வராண் டாவிலுள்ள பெஞ்ஜியில் படுத்துக்கொள்கிறேன் எனச் சொல்லிப் படுத்தேன். விடியற்காலம் நான்கு மணிக்கு ஜபம் செய்துகொண்டிருக்கும் என்னை அந்த ஆபீஸர் ஓடிவந்து காலில் நமஸ்கரித்து, ஸ்வப்பனத்தில் ஓர் திவ்ய கன்னிகை பாவாடை, பாதஸரம், கொலுசு, தோடு, பிலாக்கு, மூக்குத்தி, குங்குமம், புஷ்பம், மேலாக்கு, புஷ்பஹாரம் முதலியவைகளுடன் வந்து என்னை எழுப்பி என் மந்திரத்தை ஜபிக்கும் உபாஸகன் உனக்கு அனுக் ரஹம் செய்ய வந்திருக்கிறான். அவனை அவமதிக்கிறாயே! அவனைப்போய் நமஸ்கரித்து மன்னிப்புக் கேள் எனக் கூறினாள் என்று சொல்லி என்னை மன்னிப்புக்கேட்டார். உடன் பல இடங்களுக்குச் சென்று சிறிது காலத்திற் குள்ளாகவே நான் கோரிய ஐந்தாயிரம் (5000) ரூபாயை யும் சேர்த்துக்கொடுத்தார். இவ்விதம் ஸுலபமாகவும், பெருமையாகவும் ஸ்ரீ புவனேச்வரீ மந்திரத்தை ப்ரணவ

ஸம்புடிதபாய் ஜபித்ததின் பயனேயாகும் என்று இவ்வாறு எழுதியிருந்தார்.

இம்மாதிரி இந்த மந்திரத்தை உபதேசம் பெற்று ஜபித்து பலர் க்ஷேமங்களை அடைந்துள்ளார்கள். அவர்கள் தான் அடைந்த பெருமையை என்னிடம் கடிதங்கள் மூலமாகவும், நேரிலும் தெரிவித்துக்கொண்டு இருக்கிறார்கள். இந்த ஸ்ரீ புவனேச்வரி மந்திரத்தை அன்புடனும், ஆசார்யனிடத்தில் விச்வாசத்துடனும். உபதேசம்பெரும் ஸமயத்தில் யாராவது ஸுமங்கலிகள் வருவார்கள். பம்பாயில் பர்கோலாக்ஸ் கம்பெனி சொந்தக்காரரான ஸ்ரீ சங்கரநாராயண அய்யர் அவர்கள் சுமார் பன்லிரண்டு வருஷங்களுக்கு முன்பு ஸ்ரீ புவனேச்வரி மஹாமந்திரத்தை உபதேசம்பெற்று பல க்ஷேமங்களை அடைந்து வருகிறார். இதுபோல் பல பக்தர்கள் உபதேசம் பெற்றும், ஸ்ரீ புவனேச்வரி யந்திரத்தை பூஜை செய்தும் பல க்ஷேமங்களை அடைந்து வருகிறார்கள்.

நமது தென்னாட்டில் ஸ்ரீ புவனேச்வரி ஆலயம் இல்லாத குறையை தபஸ்விகளான ஸ்ரீ சாந்தானந்த ஸ்வாமிகள் நீக்கிவிட்டார்கள். புதுக்கோட்டை ஸத்குரு அதிஷ்டானத்தில் மணித்வீபத்தில் விளங்குவதுபோல் ஸ்ரீ புவனேச்வரிதேவி காணப்படுகிறாள். இப்படிப்பட்ட ஸ்ரீ புவனேச்வரி அம்பாளுக்கு அபிஷேகம், ஆராதனம், அர்ச்சனை, செய்கிறவர்களுக்கு ஸகல மங்களங்களும் உண்டாகும் என்பதை ஸ்ரீ ஆதிசங்கரர் கூறியதை இந்நூலில் விஸ்தாரமாக எழுதியுள்ளேன். ஒரு மனிதனிடத்தில் நல்ல ஆசார்யன், சிறந்த மந்திரம், சிறந்த தேவதை ஆகிய இம்மூன்றும் இருக்குமேயாகில் மூவுலகமும் அவன் கையில் இருக்கும் என ஸ்ரீ ஆசார்யாள் கூறியிருக்கிறார். இனி மந்திரபலமில்லாமல் உலகில் தூய மனதுடன் நல்ல வாழ்க்கை நடத்தமுடியாது. உலகையும் நல்லதாக ஆக்கமுடியாது. முனிவர்களெல்லாம் மந்திரங்களை ஜபித்து அந்தந்த தேவதைகளை தியானித்து

அந்த தெய்வமாகவே தானுகி உலகை அனுக்ரஹித்து வந்தனர், இப்படிப்பட்ட நமது பாரததேசத்தில் பொருள் ஒன்றே சுகத்தை அளிக்கும் என்ற எண்ணம் மனதில் புகுந்து வருவதை ஆஸ்திகர்கள் தடுக்கவேண்டும். மனச்சாந்தியே பெரும் செல்வம். இது மந்திரத்தாலும், தெய்வத்தாலும், ஸத்குருக்களாலும்தான் கிடைக்கும். விவேகிகள் நல்வாழ்க்கையை நடத்தவும், பின்பு நல்ல உலகங்களை அடைவதற்கும் நல்ல ஸத்குருக்களை அண்ட வேண்டும். ஸ்ரீ புவனேச்வரி தாயானவள் யாவருக்கும் மங்களங்களை அளிக்கும்படி வேண்டுகிறேன். மந்திரங்களை ஆலயங்களிலோ, தீர்தக்கரைகளிலோ, பசுக்கள் கட்டும் கொட்டில்களிலோ. பில்வம், அரசு முதலிய தெய்வீக மரத்தடியிலோ, மஹான்களின் அதிஷ்டானங்களிலோ, அக்னி ஸன்னிதியிலோ, ஜபிப்பதால் ஒரு முறை ஜபிப்பது கோடிமுறை ஜபித்ததாக ஆகும்.

இவ்வாறு ஜபித்து அனுபவத்தில் அப்பயனைக் காணலாம்.

மஹா குருக்களான ஸ்ரீ முத்தண்ணவாள் அதிஷ்டாத்தில் (சேங்காலிபுரத்தில்) சிறிதளவு ஆவர்த்தி இம்மந்திரங்களை ஜபிக்கும்பொழுதே மனதில் ஆனந்தம் பூரித்துவிடுகிறது. வடநாட்டிலிருந்து பல ஸாதுக்கள் ஸ்ரீ முத்தண்ணவாள் அதிஷ்டானத்தில் மந்திரங்களை பல வாரங்கள் ஜபித்து மந்திரஸித்தியை அடைந்து செல்கின்றனர். புதுக்கோட்டையில் ஸ்ரீ புவனேச்வரியின் ஸன்னிதி, அதிஷ்டானம் இரண்டும் இருப்பது மந்திரங்களை ஜபிப்பவர்களின் பாக்யமேயாகும். இதெல்லாவற்றிற்கும் மேல் ஸ்ரீ பரமஹம்ஸ ஸ்ரீ சாந்தானந்த ஸ்வாமிகளின் அருள் நிரம்பிய கடாக்ஷம் அங்குகிடைப்பது பெரும் பாக்யமாகும் மனிதஜென்மம் கிடைப்பது அரிது. கிடைத்த ஜன்மத்தை வீணுக்கிக்கொள்ளாதீர்கள். மஹான்களை அண்டுங்கள். மந்திரங்களை பெறுங்கள். தெய்வத்தின் அருளை அடையுங்கள் என ஆஸ்திகர்களை நான் வேண்

டிக்கொள்கிறேன். இனி ஸ்ஹஸ்ரசண்டியின் பெருமை கூறப்படும்.

இவ்விதம் பக்தர்களின் கஷ்டங்களைப் போக்குவதற்காக ஸ்ரீ அம்பாள் ஏற்கும் ஸ்வரூபத்திற்கு ஸ்ரீ துர்கை எனப் பெயர் கூறுகிறார்கள். யுத்தம் முதலிய கஷ்டங்கள் ஏற்படும் ஸமயம் ஸ்ரீ துர்கையை உபாஸிக்க வேண்டும் என்றும், அதன் பலன்களையும், முறையையும், மந்திர-மஹோததி என்னும் கிரந்தத்தில் கூறப்பட்டதை இங்கு காண்போம்.

नृपोपद्रव आपन्ने दुर्भिक्षे भूमिकम्पने ।
अतिवृष्ट्यामनावृष्टौ परचक्रभये क्षये ॥

सर्वे विघ्ना विनश्यन्ति शतचण्डीविधौ कृते ।
रोगाणां वैरिणां नाशः धनपुत्रसमृद्धयः ॥

एतद्दशगुणं कुर्यात् चण्डीसाहस्रजं विधिम् ।
एवं कृते जगद्वश्यं सर्वे नश्यन्त्युपद्रवाः ॥

ந்ருபோபத்ரவ ஆபன்னே துர்பிக்ஷே பூமிகம்பனே ।
அதிவ்ருஷ்ட்யா மனாவ்ருஷ்டௌ பரசக்ரபயே க்ஷயே ॥
ஸர்வே விக்னா விநச்யந்தி சதசண்டீவிதௌ க்ருதே ।
ரோகாணாம் வைரிணாம் நாச: தனபுத்ரஸம்ருத்தய: ॥
ஏதத்தசகுணம் குர்யாத் சண்டீஸாஹஸ்ரஜம் விதிம் ।
ஏவம் க்ருதே ஜகத்வச்யம் ஸர்வே நச்யந்த்யுபத்ரவா : ॥

இதன் பொருள்: ஸஹஸ்ர சண்டியை முறைப்படி செய்தால், அரசர்களால் ஏற்பட்ட துன்பங்கள் விலகும். மேலும் பஞ்சம், பூகம்பம், அதிக மழையின்மை வேறு தேசத்திலுள்ள சத்ருக்களான அரசர்களால் உண்டு

பண்ணப்பட்ட பயம், நஷ்டம் பல இடையூறுகள் முதலிய எல்லா கஷ்டங்களும் நீங்கும். வியாதிகள் நீங்கும். சத்ருக்கள் அழிவார்கள். பொருள், மக்கள் முதலிய ஸம்பத்துக்கள் உண்டாகும். சதசண்டி யாகத்தை, பத்து மடங்காக செய்வதற்கு ஸஹஸ்ர சண்டீயாகம் எனப் பெயர்.

இவ்வாறு ஸஹஸ்ர சண்டீயாகத்தை முறைப்படி செய்தால் எல்லா தேசங்களும் நமக்கு வசப்படும், எல்லா தீங்குகளும் நீங்கும்.

இன்றும் ஸப்தசதி என்னும், தேவீ மஹாத்மியத்தில் கூறப்பட்ட ச்லோகங்களைக் கீழே காணவும்.

शत्रुभ्यो न भयं तस्य दस्युतो वा न राजतः ।
न शस्त्रानलतो यौकात् कदाचित् संभविष्यति ॥
उपसर्गाः शमं यान्ति ग्रहपीडाश्च दारुणाः ।
संघातभेदे च नृणां मैत्रीकरणमुत्तमम् ॥
युद्धेषु चरितं यन्मे दुष्टदैत्यनिबर्हणम् ।
तस्मिन् श्रुते वैरिकृतं भयं पुंसां न जायते ॥
रिपवः संक्षयं यान्ति कल्याणं चोपपद्यते ।

சத்ருப்யோ ந பயம் தஸ்ய தஸ்யுதோ வா ந ராஜத: ।
ந சஸ்த்ரா நலதோ யௌகாத் கதாசித் ஸம்பவிஷ்யதி ॥
உபஸர்கா: சமம் யாந்தி க்ரஹபீடாச்ச தாருண: ।
ஸங்காதபேதே ச ந்ருணும் மைத்ரீகரணமுத்தமம் ॥
யுத்தேஷு சரிதம் யந்மே துஷ்டதைத்ய நிபர்ஹணம் ।
தஸ்மின் ச்ருதே வைரிக்ருதம் பயம் பும்ஸாம் ந ஜாயதே ॥
ரிபவ: ஸம்க்ஷயம் யாந்தி கல்யாணம் சோபபத்யதே ।

இதன் பொருள்:ஸ்ரீ அம்பாளை (ஸஹஸ்ர சண்டீஹோமத்தால் ஆராதித்தால்) சத்ரு பயம் விலகும். திருடர்களால் துன்பம் ஏற்படாது. ஆயுதங்கள், நெருப்பு, ஜலம் முதலியவற்ருல் துன்பம் ஏற்படாது. அபசகுனங்கள் விலகும். ஒரு ராசியில் பல கெட்ட க்ரஹங்கள் சேர்வதால் ஏற்படும் கடும் துன்பங்கள் விலகும். பெருங் கூட்டங்களால் ஏற்படும் துன்பங்கள் விலகி ஒருமைப்பட்ட மனதுடன் யாவருக்கும் அன்பு ஏற்படும். ஸஹஸ்ர சண்டீ யாகத்தில் படிக்கப்படும் ஸப்தசதீ ஸ்தோத்திரத்தால் யுத்தங்களில் அஸுரர்கள் போன்ற சத்ருக்களால் ஏற்பட்ட பயம் நீங்கும். அந்த ஸ்துதியை யாகத்தில் கேட்பவர்களுக்கும் ஒருபொழுதும் சத்ருவினுல் துன்பம் ஏற்படாது. உலகிலேயே சத்ருக்கள் இல்லாமல் ஆகிவிடும். இவ்வாறு பல நற்பயன்கள் கிட்டும் என பல மந்திர சாஸ்திரங்கள் கூறியுள்ளன.

தேவீஸப்தசதி என்ற தேவீ மாஹாத்ம்யம் முழுவதும் மஹாமந்திரங்கள், அதை பெரியோர்களிடம் உபதேசம் பெற்றே பாராயணம் செய்ய வேண்டும். இதனுலேயே எல்லா துன்பங்களும் விலகி, தான் கோரிய ஜயம், ஐச்வர்யம் முதலியவற்றை அடையலாம். இது முழுவதையும் பாராயணம் செய்ய முடியாதவர்கள், கீழே காணப்படும் தேவீஸப்தச்லோகீ, என்பதை பெரியோர்களிடம் உபதேசம் பெற்று பாராயணம் செய்தாலும் எல்லா நன்மைகளும் கிடைக்கும் என்று இந்த ஸப்தச்லோகீ, என்ற ஸ்தோத்திரத்தை ஸ்ரீ அம்பாள் ஸ்ரீ பரமசிவனிடம் கூறியுள்ளாள்.

* ஸ்ரீ தேவீ ஸப்த ச்லோகீ *

शिवः —

देवि त्वं भक्तसुलभे सर्वकार्यविधायिनि ।
कलौ हि कार्यसिद्ध्यर्थं उपायं ब्रूहि यत्नतः ॥

देवी —

शृणु देव प्रवक्ष्यामि कलौ सर्वेष्टसाधनम् ।
मया तवैव स्नेहेनाप्यंबा स्तुतिः प्रकाश्यते ॥

अस्य श्रीदुर्गासप्तश्लोकीमहामन्त्रस्य । नारायण ऋषिः । अनुष्टुप् छन्दः । श्रीमहाकाळी महालक्ष्मी सरस्वत्यो देवताः । श्रीदुर्गाप्रीत्यर्थं सप्तश्लोकी दुर्गापाठे विनियोगः ॥

ज्ञानिनामपि चेतांसि देवी भगवती हि सा ।
बलादाकृष्य मोहाय महामाया प्रयच्छति ॥ 1 ॥

दुर्गे स्मृता हरसि भीतिमशेषजन्तोः
स्वस्थैः स्मृता मतिमतीवशुभां ददासि ।
दारिद्र्यदुःखभयहारिणि का त्वदन्या
सर्वोपकारकरणाय सदार्द्रचित्ता ॥ 2 ॥

सर्वमङ्गळमाङ्गळ्ये शिवे सर्वार्थसाधिके ।
शरण्ये त्र्यंबके गौरि नारायणि नमोऽस्तु ते ॥ 3 ॥

शरणागतदीनार्त परित्राणपरायणे ।
सर्वस्यार्तिहरे देवि नारायणि नमोऽस्तु ते ॥ 4 ॥

सर्वस्वरूपे सर्वेशे सर्वशक्तिसमन्विते ।
भयेभ्यस्त्राहि नो देवि दुर्गे देवि नमोऽस्तु ते ॥ 5 ॥

रोगानशेषानपहंसि तुष्टा
रुष्टा तु कामान् सकलानभीष्टान् ।
त्वामाश्रितानां न विपन्नराणां
त्वामाश्रिता ह्याश्रयतां प्रयान्ति ॥ 6 ॥

सर्वबाधाप्रशमनं त्रैलोक्यस्याखिलेश्वरि ।
एवमेव त्वया कार्यं अस्मद्वैरिविनाशनम् ॥ 7 ॥

சிவ :—

தேவி த்வம் பக்தஸுலபே ஸர்வகார்யவிதாயினி ।
கலௌ ஹி கார்யஸித்யர்த்தம் உபாயம் ப்ரூஹி யத்னத : ॥

தேவி :—

ச்ருணு தேவ ப்ரவக்ஷ்யாமி கலௌ ஸர்வேஷ்டஸாதனம் ।
மயா தவைவ ஸ்நேஹேநாப்யம்பா ஸ்துதி : ப்ரகாச்யதே ॥

1) க்ஞாநினமபி சேதாம்ஸி தேவீ பகவதி ஹி ஸா ।
பலாதாக்ருஷ்ய மோஹாய மஹாமாயா ப்ரயச்சதி ॥

2) துர்கே ஸ்ம்ருதா ஹரஸி பீதி மசேஷஜந்தோ :
ஸ்வஸ்த்தை : ஸ்ம்ருதா மதிமதீவ சுபாம் ததாஸி ।
தாரித்ர்யது :க பயஹாரிணி! காத்வதன்யா
ஸ்ர்வோபகார கரணாய ஸதார்த்ரசித்தா ॥

3) ஸர்வமங்கள மாங்கள்யே சிவே ஸர்வார்த்த ஸாதிகே।
சரண்யே த்ர்யம்பிகே கௌரி நாராயணி நமோ஽ஸ்து தே॥

4) சரணாகததீனார்த்த பரித்ராண பராயணே ।
ஆபன்னார்த்திஹரே தேவி நாராயணி நமோ஽ஸ்து தே ॥

5) ஸர்வஸ்வரூபே ஸர்வேசே ஸர்வசக்தி ஸமன்விதே ।
பயேப்யஸ்த்ராஹி நோ தேவி துர்கே தேவி
நமோஸ்஽து தே ॥

6) ரோகாநசேஷாநபஹம்ஸி துஷ்டா
ருஷ்டாது காமாந் ஸகலாநபீஷ்டான் ।
த்வாமாச்ரிதானாம் ந விபந்நராணாம்
த்வாமாச்ரிதாஹ்யாச்ரயதாம் ப்ரயாந்தி ॥

7) ஸர்வபாதா ப்ரசமனம் த்ரைலோக்யஸ்யாகிலேச்வரி ।
ஏவமேவ த்வயா கார்யம் அஸ்மத் வைரி விநாசனம் ॥

இதன் பொருள்,

ஸ்ரீ பரமசிவன் பார்வதியைப் பார்த்துக் கூறுகிறார் — பக்தர்களுக்கு ஸுலபையும், ஸர்வகார்யங்களையும் ஸித்திக்கும்படி செய்பவளுமான ஓ தேவி ! நீ கலியில் கார்ய ஸித்திக்கு எந்த முயற்சியைச் செய்தால் கார்யம் கிட்டுமென கூறவேண்டும். (1) ஸ்ரீ தேவி கூறுகிறாள் — ஓ தேவ ! இக்கலியில் கோரிய எல்லாவற்றையும் எது அளிக்குமென்பதை கூறப்போகிறேன், கேளுங்கள். நான் தங்களிடத்திலிருக்கும் ஸ்னேஹத்தினால் ஸ்ரீ அம்பாளின்

ஸ்தோத்திரத்தை வெளியிடுகிறேன். (2) இந்த மந்திரத்தைக் கண்டுபிடித்தவர் ஸ்ரீமன் நாராயணன். சந்தஸ் அனுஷ்டுப், ஸ்ரீ மஹாகாளியும், ஸ்ரீ மஹாலக்ஷ்மியும், ஸ்ரீ மஹாஸரஸ்வதியும் இந்த மந்திரத்துக்கு தேவதைகள். ஸ்ரீ துர்காப்ரீதிக்காக இந்த ஸப்தச்லோகியை படிக்கத்தொடங்குகிறேன்.

பகவதியும் மஹாமாயையுமான அந்த தேவியானவள் ஞானிகளுடைய மனதுகளைக்கூட பலாத்காரமாக இழுத்து மோஹிக்கும்படி செய்கிருள். அதாவது மாயையினுல் தோன்றும் பொய்யான பொருள்களை ஸத்யமென நினைத்து ஆசைப்படும்படி செய்கிருள். (1) ஓ துர்கா தேவியே! தங்களை நினைத்த மாத்திரத்தில் எல்லா ப்ராணிகளின் மனக்கவலையைப் போக்குகிருய். சுகமாக இருப்பவர்கள் தங்களை நினைத்தார்களானுல் அவர்களுக்கு நிரம்ப நல்ல புத்தியை அளிக்கிருய். ஏழ்மை, துக்கம், பயம் இவற்றை போக்குகிறவள் உன்னைத்தவிர வேறுயார் உலகில் இருக்கிருள்? யாவருக்கும் உதவி புரிவதற்காக எப்பொழுதும் கருணையினுல் நனைந்த மனமுள்ளவளாக இருக்கிருய். (2) எல்லா மங்களங்களையும் அளிப்பவளும், பரமசிவனின் மனைவியும், எல்லாப்பொருள்களையும் கொடுப்பவளும், சரணமடைந்தவர்களை ரக்ஷிப்பவளும் முக்கண்ணை உடையவளும், நாராயணனுக்கு சகோதரியுமான ஓ தேவி! தங்களுக்கு நமஸ்காரம் (3) தங்களைச் சரணமடைந்த மனத்துயரமூற்ற ஏழைகளை காத்தலை காரியமாகக்கொண்டவளும், எல்லாருடைய மனக்கவலையை போக்குகிறவளும், நாராயணனின் சகோதரியுமான ஓ தேவி! தங்களுக்கு நமஸ்காரம். (4) எல்லா பொருளாகவும் இருப்பவளே! யாவற்றுக்கும் ஈச்வரியாக

இருப்பவளும், எல்லா சக்தியுடன் கூடியவளும், துக்கத்தைப் போக்குகிறவளுமான ஓ தேவி! பயங்களிலிருந்து எங்களை காக்கவேண்டும். தங்களை நமஸ்கரிக்கிறேன், (5) ஓ தேவி! நீ சந்தோஷம் கொண்டால் எல்லா ரோகங்களையும் போக்குகிறாய். கோபம் கொண்டால் கிடைத்த எல்லா போக போக்ய வஸ்துக்களையும் அபஹரிக்கிறாய். உன்னை அண்டிய மனிதர்களுக்கு ஆபத்தே கிடையாது. உன்னை அண்டினவர் பிறருக்கு ஆச்ரயமாக ஆகிறார்கள், (6) ஓ யாவருக்கும் ஈச்வரியே! எல்லா துன்பங்களையும் மூவுலகத்திற்கும் ஏற்பட்ட எல்லா துன்பங்களையும் போக்கவேண்டும். இவ்வாறே நீ எங்களது சத்ருக்களையும் நாசமாக்க வேண்டும். (7)

தேவீ ஸப்தச்லோகீ முற்றும்.



ஸ்ரீ:

ஸ்ரீ நவாக்ஷரீ மஹாமந்த்ரத்தை ஜபிப்பதின் பயன்

ஸ்ரீ துர்கோபாஸனா கல்பத்ருமம் எனும் மந்திர சாஸ்திரத்தில் நவாக்ஷரீ மஹாமந்திரத்தை ஜபிப்பதின் பயனை கூறும் ச்லோகங்களும் மூலமந்திரமும், ருஷி, சந்தஸ் தேவதைகளும்.

ऐं ह्रीं क्लीं चामुण्डायै विच्चे इति नवाक्षरो मंत्रः ।

एतानि बीजानि नवात्मकस्य जप्तुः प्रदद्युः सकलार्थसिद्धिम् ।

नवबीजविशुद्धोऽयं मन्त्रस्त्रैलोक्यपावनः ।
एनं जपति यो मंत्री फलं तस्य वदाम्यहम् ॥
वश्या भवन्ति कामिन्यो राजानोऽनुचरा इव ।
न हस्तिसर्पदावाग्नि चोरशत्रुभयं भवेत् ॥
सर्वाः समृद्धयस्तस्य जायन्ते चण्डिकाज्ञया ।
नश्यन्ति दारुणा रोगाः सत्यं सत्यं न संशयः ॥
सहस्रमस्य मंत्रस्य नवबीजस्य यो जले ।
नाभिमात्रे जले सम्यक् कवित्वं लभते ध्रुवम् ॥
अयुतं नवतत्वस्य राजबन्धनसंकटैः ।
जपेत्तदाशु मुच्येत यो मंत्री चण्डिकाज्ञया ॥
अस्मिन्नवाक्षरे मंत्रे महालक्ष्मीर्व्यवस्थिता ।
तस्मात्सुसिद्धः सर्वेषां सर्वेदिक्षु प्रदीपकः ॥

अनेनास्य सिद्धादिविचारो नास्तीति सूचितम् ॥
नवाक्षरस्य ऋषयो ब्रह्मविष्णुमहेश्वराः ॥
छन्दांस्युक्तानि मुनिभिर्गायत्र्युष्णिगनुष्टुभः ।
देव्याः प्रोक्ताः महापूर्वाः काळी लक्ष्मीः सरस्वती ॥
नन्दा शाकंबरी भीमा शक्तयोऽस्य मनोः स्मृताः ।
स्याद्रक्तदन्तिका दुर्गा भ्रामर्यो बीजसंचयः ॥
अग्निवायुभगास्तत्त्वं फलं वेदत्रयोद्भवम् ॥
(भगः – सूर्यः)
सर्वाभीष्टप्रसिद्ध्यर्थं विनियोग उदाहृतः ।
ऋषिच्छन्दो दैवतानि शिरोमुखहृदि न्यसेत् ॥
शक्तिबीजानि स्तनयोस्तत्वानि हृदये पुनः ।
मंत्राणां पल्लवो वासः मंत्राणां प्रणवः शिरः ॥
शिरः पल्लवसंयुक्तो मंत्रः कामदुघः फले ॥

இந்த நவாக்ஷரீ மந்த்ரம் ஜபிப்பவருக்கு சகல காரிய சித்தியையும் அளிக்கும். இம் மந்த்ரம் மூவுலகையும் பரிசுத்தமாக்கும். இதை ஜபிப்பவருக்கு கிடைக்கும் பயனைக் கூறுகிறேன். ராஜாக்கள் முதலியோர் வசமாவார்கள். யானை, சர்ப்பம், காட்டுத்தீ, திருடன், எதிரி இவர்களால் பயமுண்டாகாது. ஸ்ரீ அம்பிகையின் உத்திரவினால் எல்லா ஸமிருத்திகளும் உண்டாகின்றன. கடும் வியாதிகள் எல்லாம் நசித்துவிடும். இது சத்யம். இது சத்யம். சந்தேகமில்லை. இந்த நவாக்ஷரீ மந்த்ரத்தை யார் தொப்புள் அளவு ஜலத்தில் இருந்துகொண்டு ஜபிக்கிறார்களோ அவர்கள் கவித்வ சக்தியை அடைகிறார்கள். நிச்சயம். பதினாயிரம் முறை ஜபிப்பவர் எதிரி அரசர்களால் ஏற்படும் பந்தங்களிலிருந்து ஸ்ரீ அம்பாளின் உத்திரவால் விடுபடுவார். இந்த நவாக்ஷரீ மஹாமந்த்

ரத்தில் மஹாலக்ஷ்மீ நிலைபெற்றிருக்கிருள். உலகத்தி லுள்ளோருள் நல்லசித்திபெற்றவனுகவும் எல்லா திக்கு களிலும் தீபம்போல் ப்ரகாசிப்பவனுகவும் விளங்குவார், ஆகையால் இம்மந்திரத்திற்கு சித்தாதிகோஷ்டம் பார்த்து மந்திரோபதேசம்பெறத் தேவையில்லை. ப்ரம்மா விஷ்ணு மஹேச்வரன் இவர்கள் இம்மந்திரத்தை கண்டு பிடித்தவர்கள். ஆகையால் இவர்கள் இம்மந்திரத்திற்கு ரிஷிகள். மற்றவைகளின் பொருள்களை மந்திரமறிந்த பெரியோர்களின் வாயிலாக கேட்டறியவும்; புத்தகத் தில் எழுதுவது அவசியமில்லை என எழுதவில்லை. இம் மந்திரத்தையும் குரு முகமாகவே உபதேசம் பெற வேணும். புத்தகத்தில் எழுதியதால் பார்த்துப் படிப் பது பயனையளிக்காது,

पल्लवो नमोऽन्तः ।

न्यासं विना भवेन्मूकः सुप्तः स्यादासनं विना ।
पल्लवेन विना मंत्रो नग्नः संपरिकीर्तितः ॥
शिरो हीनो मृतः प्रोक्तो वृथा मंत्रो गुरुं विना ।
हतो दुष्टाय दत्तो यो निर्वीर्यक्षाधिकाक्षरः ॥
अन्तरालेन बीजेन व्याप्तः कीलित उच्यते ।
यस्य जाप्यं शृणोत्यन्यः स मंत्रः शून्य उच्यते ।
ऋषिदैवतछन्दोभिः परित्यक्तो भुजङ्गमः ॥
मूकः सुप्तो मृतो नग्नो वीर्यहीनो वृथा हतः ।
भुजङ्गः कीलितः शून्य ईदृङ्मन्त्रोऽन्यथा फलः ।
यत्नादिवर्जयेन्मंत्री यदीच्छेत्सिद्धिमात्मनः ।
नमोऽन्तः शान्तिके पुष्टौ प्रणिपाते च कीर्तितः ।
वश्याकर्षणहोमेषु स्वाहान्तः सिद्धिदायकः ॥

वौषट्पल्लवसंयुक्तो मंत्रो लक्ष्म्यादिसाधकः ॥
हुंकारपल्लवोपेतो मारणं ब्राह्मणं विना ।
यन्त्रभंजनकार्येषु सुघोरभयनाशने ॥
षषडन्तो महाकल्पो ग्रहमालाब्धिनाशकः ।
खण्डनोच्चाटने बन्धे मंत्रो फट्पल्लवान्वितः ॥
जातिहीना न सिध्यन्ति तस्माज्जातिं नियोजयेत् ।
नमः स्वाहा वषट्कं च वौषट् फडिति जातयः ॥
ओंकारमुखजौ मन्त्रौ वेदागमसमुद्भवौ ।
पल्लवोऽस्त्यागमे मन्त्रे वैदिके नास्ति पल्लवः ॥
पल्लवेन च जप्योऽयं मन्त्रो वेदसमुद्भवः ।
न नग्नः कीर्त्यते यस्मान्नैश्वर्यपरिधानवान् ॥
नद्यादौ विधिवत्स्नात्वा नाभिमात्रेऽम्भसि स्थितः ।
दशाञ्जलिभिरात्मानं नवबीजेन प्लावयेत् ।
कृत्वा माध्याह्निकं सर्वमुदकान्ते समाहितः ॥
तर्पणीयं महालक्ष्म्याः षडङ्गन्यासमाचरेत् ।
मायाबीजं चण्डिकायै हृदयादि नमोऽन्तकम् ॥
ओं मायाबीजं चण्डिकायै अङ्गुष्ठाभ्यां नमः ॥
(एवं हृदयादि)

एवं न्यासविधिं कृत्वा ध्यात्वा महिषमर्दिनीम् ।
चण्डिकां त्रिजगद्धात्रीं ब्रह्माद्यमरवन्दिताम् ।
ततश्च नवबीजान्ते चण्डिका तृप्यतामिति ॥

अञ्जलीनामष्टशतं सुगन्धिकुसुमान्वितम् ।
अशक्तौ तु तदर्धेन तदर्धार्धेन वा पुनः ।
महालक्ष्मीं तर्पयित्वा प्रार्थितान् लभते ध्रुवम् ॥

இப்படிப்பட்ட ஸஹஸ்ரசண்டீ மஹா யாகத்தை ஸ்ரீ சாந்தாநந்த ஸ்வாமிகள் என்ற தபஸ்விகள் 2—6—63 அன்று புதுக்கோட்டை ஸ்ரீ புவனேச்வரீ அம்பாளின் முன்னிலையில் நடத்தப்போகிறார்கள். ஸ்ரீ ஸ்வாமிகள் சேந்தமங்கலம் ஸ்ரீ அவதூத ஸ்வாமிகளின் அனுக்ரஹத்திற்கு பரிபூர்ணமான பாத்திரர்களானவர்கள். இவர்கள் சிறந்த அவதூத ஸன்யாஸிகள். நல்ல உபாஸகர்கள். ஸ்ரீ அம்பாளின் அருளால்தான் இந்த மஹாயாகத்தை செய்ய முன்வந்திருக்கிறார்கள். 28—5—63 ல் பூர்வாங்கமான ஸ்ரீ விநாயக பூஜை முதலிய மங்கள கார்யங்கள் ஆரம்பிக்கப்படும். 210, வேத வித்துக்கள், உபாஸகர்கள் ஆசாரத்துடன் ஸப்தசதீ பாராயணம், நான்குவேத பாராயணம் ஸ்ரீ தேவீ பாகவதம் ஸ்ரீ லலிதோபாக்யானம், ஸௌந்தர்ய லஹரீ, முதலிய பாராயணங்களும். ஸ்ரீ கணபதி ஹோமம், நவக்ரஹ ஜபம். நவக்ரஹ ஹோமம், ஸ்ரீ நவாக்ஷரீ முதலிய ஸ்ரீ அம்பாளின் மந்திரங்களை ஜபிக்க வரிக்கப்படுவார்கள்.

10 அக்னி குண்டங்கள் அமைக்கப்படும். அந்த குண்டங்களில் பூர்ணாஹுதி செய்யும்பொழுது ஸ்ரீ அம்பாளே நித்ய கல்யாணியாய் விளங்குவது பக்தர்களின் மனதிற்கு புலப்படும். 30 கலசங்கள் அமைக்கப்படும். ஸ்ரீ அம்பாளின் யந்திரங்கள் 10, அங்கு பூஜையில் வைக்கப்படும். 130, (நூற்றுமுப்பது) ஸுமங்கலிகள் பட்டு வஸ்திரம், குங்குமம், மஞ்சள், புஷ்பம் முதலிய மங்கள

திரவியங்களால் பூஜிக்கப்படுவார்கள். அக்னி குண்டங்களில் பூர்ணாஹுதி ஹோமத்திற்கு பல மங்களத்திரவியங்கள் உபயோகிக்கப்படும். பசு நெய்யால் லக்ஷக்கணக்கான ஹோமங்கள் செய்யப்படும். இதற்கு (ஹோமத்திற்கு) நிரம்ப பசு நெய் உபயோகிக்கப்படும். அக்னியில் செய்யும் ஹோமத்தால்தான், உலகிலுள்ள மலை போன்ற பாபங்கள் விலகுமென்று மஹாபாரதம் கூறியுள்ளது. பல ஆயிரம் அடியார்களுக்கும், ஏழைகளுக்கும் அன்னமளிக்கப்படும். பல குடும்பங்களில் ஸுமங்கலீ சாபம், பசுவின் சாபம், குல தெய்வத்தின் கோபம் முதலிய தோஷங்கள் இருப்பது, சந்திரன். செவ்வாய், சுக்ரன் இவர்கள் நீசனாக இருப்பதாலோ, கெட்ட இடங்களில் இருப்பதாலோ, மனக்கோளாறு, ஆஸ்துமா, க்ஷயரோகம், ரத்தக்கோளாறு முதலிய ரோகங்கள் காணப்பட்டாலோ இவை யாவும் இந்த ஸஹஸ்ரசண்டீ யாகத்தால் நிச்சயம் விலகும்.

நமது தேசத்தில் யுத்தபீதி ஏற்பட்டதும், ஸ்ரீ சாந்தாநந்த ஸ்வாமிகள் இந்த யாகத்தை ஜட்ஜ் அவதூத ஸ்வாமிகளின் திரு நக்ஷத்திரமாகிய வைகாசி ஹஸ்த நக்ஷத்ர தினத்தன்று செய்வதாய் தீர்மானித்தார்கள். அவர்கள் இப்படி தீர்மானித்ததும், யுத்தபயம் ஒருவாறு இப்பொழுது நீங்கிவிட்டதாகச் சொல்லலாம். ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு இவ்விதமான ஸஹஸ்ரசண்டீ மஹாயாகம்செய்ய வேண்டுமெனத் தோன்றியதும், இது நமது ஸங்கல்பமா? ஸ்ரீ அம்பாளின் அருளால் தோன்றியதா? என பல தினங்கள் சிந்தித்து ஸ்ரீ அம்பாளின் அருளால்தான்தோன்றியது எனத் தீர்மானம் தெரிந்ததும், சேலத்திற்கு நேராக வந்து என்னிடம் உள்ளபடியே கூறினார்கள். அதைக் கேட்டதும் எனக்கு மிகுந்த ஆச்சர்யமாக இருந்தது. இதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்யவேண்டுமென்றும், நான்

ஸந்யாஸியாகையால், தாங்கள்தான் முன் நின்று நடத்த வேண்டும் என்றெல்லாம் என்னிடம் கூறினார்கள். ஸ்ரீ அம்பாளின் ஆக்ஞை என்றே என் மனதில் பட்டு விட்டது. அக்னி, தீர்த்தம், வேதவித்துக்கள், அரசு, பசு ஆலயத்திலுள்ள பிம்பங்கள், சூரியன், சந்திரன், துறவிகள், ஸுமங்கலிகள் முதலிய இவைகளெல்லாம் தெய்வத்தை பூஜிப்பதற்கான இடங்கள். இங்கு அளிப்பவை எல்லாம் ஸ்ரீ அம்பாளிடம் சேர்ந்துவிடும். அரசனின் உத்தரவால் ஏற்பட்ட போஸ்டாபீஸ் பெட்டியில் போடப்பட்ட கடிதங்கள் குறிப்பிட்ட இடத்திற்குச் செல்வதுபோல் எனலாம். ஆனால் இந்த அக்னிகுண்டம் முதலியவைகளில் ஸ்ரீ அம்பாளே (நாம் குறிப்பிட்ட தெய்வமே) நேரில் வந்துவிடுமென வேதங்கள் கூறுகின்றன. ஆறு தினங்கள் தொடர்ந்து நடத்தப்படும், இம்மஹாயாகத்தில் ஜப, ஹோம, காலங்களில் சுத்தமான மனதுடன் தரிசிப்பவர்களுக்கு ஸ்ரீ அம்பாள் நித்ய கல்யாணியாய் தர்சனம் கொடுப்பாள். இந்த யாகத்தில் ஒவ்வொரு தினமும் பல வாஸனை புஷ்பங்களால் அர்ச்சனைகளும், பல்லாயிரக்கணக்கான பேர்களுக்கு அன்னதானமும் நடக்கப்போகிறது. இவ்விதம் ஆராதிக்கப்படும் ஸ்ரீ அம்பாளே ஒவ்வொருவருடைய மனதிலுள்ள யுத்த பயத்தை போக்கி எங்கும் அன்பை பரவச்செய்வாள். அவள்தான் உலகிற்குத் தாய். மக்களின் குறைகளைத் தாய்தான் நீக்குவாள். இப்பேர்ப்பட்ட பெரிய கார்யத்தைச் செய்கின்ற ஸ்ரீ சாந்தாநந்த ஸ்வாமிகள் உத்தம தபஸ்விகள். புதுக்கோட்டை அதிஷ்டானத்திலுள்ள ஸ்ரீ புவனேச்வரி அம்பாளை தியானம் செய்து செய்து ஸ்ரீ அம்பாளாகவே ஆனவர்கள், இவர்களை தர்சனம் செய்தவர்களே இப் பெருமையை உணரமுடியும். இம் மஹான்களின் அனுக்

ரஹத்திற்கு யாவரும் பாத்திரர்களாக வேண்டும். இவர்கள் நடத்தும் ஸஹஸ்ரசண்டீ யாகத்திற்கு ஆஸ்திகர்கள் பொருளாலும், சரீரத்தாலும், வாக்கினாலும் உதவி புரிந்து ஸ்ரீ அம்பாளின் அருளை அடையக் கோருகிறேன், இதுவே நம்மையும், நம் குடும்பத்தையும், ரக்ஷிக்கும். இந்த ஸஹஸ்ரசண்டீ யாகத்தில் ஸ்ரீ ஸ்வாமிகளின் ஆக்ஞையின் பேரில் ஸ்ரீமத்பாகவதத்தை ஸப்தாஹமாக உபன்யஸிக்கப்போகிறேன். பலவித நன்மைகளை அடைய இதுவே தகுந்த ஸமயம். ஆகவே யாவரும் இதில் கலந்துகொள்ளவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் சென்ற வருஷத்தில் ஆகாசத்தில் எட்டு கிரஹங்கள் சேர்ந்ததால் பல நாடுகளுக்கு பதிமூன்று வருஷம் எதிர்பாராத துன்பங்கள் ஏற்படக்கூடும். ஸ்ரீ ராமன், தர்மபுத்திரர் முதலியவர்களையும் இக்கிரஹ யோகமானது துன்புறுத்தியது. அம்மாதிரி கஷ்டங்கள் உலகிற்கு வராமல் இருப்பதற்காகவே இந்த ஸஹஸ்ர சண்டீ யாகம் நடத்தப்படுகிறது. இப்படிப்பட்ட பெருமைகளை உலகம் புரிந்துகொள்வதற்காகவே ஸ்ரீ ஸ்வாமிகள் இந்நூலை வெளியிடுகிறார்கள்.

ஸ்ரீ ஜகத்குரு காஞ்சி காமகோடி பீடாதிபதிகளும், ஸ்ரீ ஜகத்குரு ச்ருங்ககிரி பீடாதிபதிகளும், சரத்கால நவராத்ரியிலும், வஸந்த நவராத்ரியிலும், மற்றும் பல ஸமயங்களிலும், சண்டீ ஹோமத்தை முறைப்படி நடத்தி வருகிறார்கள். மேலும் பல மடாதிபர்களான துறவிகளும் நடத்திவருகிறார்கள். அதனாலேயே பல துன்பங்கள் நம் தேசத்தை பாதிக்காமல் விலகுகின்றன. இப்பொழுது செய்யப்படும் ஸஹஸ்ரசண்டீ யாகத்திற்கு சுமார் எண்பதாயிரம் ரூபாய் தேவையாகும். நம் துயரங்களை போக்கிக்கொள்ள ஏழைகள் முதல் இந்த மஹாயாகத்

திற்கு தங்களால் இயன்ற பரிபூர்ண உதவியைச் செய்து ஸ்ரீ அம்பாளின் அருளையும் ஸ்ரீ புவனேச்வரி உபாஸகர் களான ஸ்ரீ சாந்தானந்த ஸ்வாமிகளின் அனுக்ரஹத் தையும் அடையக்கோருகிறேன். இந்த மஹா யாகத் திற்கு நிரம்ப சந்தனக்கட்டைகள், குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம், முறைப்படி மஞ்சளில் செய்த குங்குமம், குங் குமச் சிமிழ்கள், சீப்பு, கண்ணாடிகள், சிறந்த வாசனைகள் ஏராளமான ரவிக்கைத்துண்டுகள் பட்டுப்புடவைகள், நூல் புடவைகள், திருமாங்கல்யங்கள் இன்னும் பல வஸ் திரங்கள் தேவையாகும். இதற்குரிய பொருள்களையும் இந்த ஸாமான்களையும் உதவிபுரியலாம். அன்னதானத் திற்கு ஏராளமான உணவுப்பொருள்களையும் கொடுக்க லாம். இவ்விதம் கொடுப்பதெல்லாம் ஸ்ரீ அம்பாளிடத் தில் நேரில் கொடுப்பதாகவே ஆகும். எல்லோருடைய உள்ளத்திலும், பிறப்பிலேயே ஸ்ரீ அம்பாள் தன்னை உபாஸிக்கும்படி அருள்புரிந்திருக்கிறாள்.

இந்த ஸஹஸ்ரசண்டீ மஹா யாகத்தில் பல உபா ஸகர்கள் ஸப்தசதீ மஹா மந்திரத்தை பல ஆவர்த்தி ஜபித்து ஸ்ரீ அம்பாளின் மந்திரமான நவாக்ஷரியையும் ஜபித்து அவைகளாலேயும் ஹோமங்கள் செய்வார்கள்.

இவ்விதம் ஹோமங்கள் செய்து பூர்ணாஹுதி செய் தது எல்லா உபாஸகர்களும் அக்னி குண்டங்களைப் பார்த்து,

उत्तिष्ठ देवि कल्याणि शुभां पूजां प्रगृह्य च ।
कुरुष्व मम कल्याणं अष्टाभिश्शक्तिभिस्सह ॥

உத்திஷ்ட தேவி கல்யாணி சுபாம் பூஜாம் ப்ரக்ருஹ்ய ச ।
குருஷ்வ மம கல்யாணம் அஷ்டாபிச்சக்திபிஸ் ஸஹ ॥

மங்களத்தை அளிப்பவளான ஓ அம்பிகே, தாங்கள் இக் குண்டங்களிலிருந்து வெளிவரவேண்டும். மங்கள மான இப்பூஜையைப் பெற்றுக்கொண்டு, எட்டு சக்தி களுடன் கூட எங்களுக்கு மங்களத்தைச் செய்யவேண் டும், என்று வேண்டுவார்கள். இது ஸமயம் பக்தர்கள் யாவருக்கும் ஸ்ரீ அம்பாள் நேரில் வருவது போலவே இருக்கும். இவ்விதம் அம் மஹாமந்திரங்களை காதுக ளால் கேட்பதாலும், மிகுந்த கடன் தொல்லைகள், வியா திகள், ஏழ்மை, இவைகள் அடியோடு விலகுகின்றன.

ऋणकोट्यापहरणं रोगदारिद्र्यनाशनम् ।

ருண கோட்யாபஹரணம் ரோகதாரித்ர்ய நாசனம் ।

என்று, இப்படி அளவுகடந்த பயன்களை ஸ்ரீ ஸஹஸ்ர சண்டீ மஹாயாகமே அளிக்கும் என்று மந்திர சாஸ்தி ரங்கள் கூறுகின்றன. இப்படிப்பட்ட மங்களமான பயன்கள் உலகிற்கு உண்டாகவேண்டுமென ஸ்ரீ சாந்தா நந்த ஸ்வாமிகள் ஆரம்பித்த இந்த மஹாயாகத்தில் ஆஸ்திகர்கள் அனைவரும் கலந்துகொண்டு தங்களால் இயன்ற உதவியை செகரட்ரி, புவனேச்வரீ நகர், புதுக் கோட்டை என்ற விலாசத்திற்கு அனுப்பி ஸ்ரீ அம்பா ளின் அருளை அடையக்கோருகிறேன்.

இப்படிக்கு,

சேங்காலிபுரம், அனந்தராம தீக்ஷிதர்.



கீதாஞ்ஜலி பிரஸ் பிரைவேட் லிட்., புதுக்கோட்டை 169-63.

கீதாஞ்ஜலி பிரஸ் பிரைவேட் லிமிடெட்,
புதுக்கோட்டை—169-63.